**குன்மரோகம்**

**குன்மம் எட்டின்பெயர்**

வகைபடு குன்ம மெட்டின் வகைசொலின் வாத குன்மம்
தொகைபடு பித்த குன்மந் தோன்றிடுஞ் சேற்ப குன்மம்
மிகைபட வெரிக்குங் குன்மம் வேறுள சத்தி குன்மம்
புகைபடு சூலை குன்மம் வலிகுன்மங் குன்ம சூலை

**அவற்றுள் சாத்தியம்-4**

**அசாத்தியம்-4**

உரைத்திடும் பித்த குன்மஞ் சேற்பன குன்மத் தோடே
எரித்திடு குன்மங் குன்ம சூரையோ டீரி ரண்டும்
பரித்திடு சாத்தி யங்க ளசாத்தியம் வாத குன்மம்
வருத்திடு சத்தி குன்மம் வலிகுன்மஞ் சூலை குன்மம்

**சாத்தியம்-4ல்**

**1-பித்தகுன்மம்**

ஓதிய சாத்தி யங்க ளுரைத்திடு குன்ம நாலில்
கோதுறு பித்த குன்மக் குறிகுண மியம்பக் கேண்மின்
தீதுறு சுரத்தி னாலே தேகமும் வரண்டு நாளும்
ஊதையுண் டாகி மூலத் துண்மல முலருங் காணே

மலமு முலர்ந்து வாய்வுண்டா யாகம் வற்றி நெஞ்செரிக்கும்
குலவு மசனங் கொண்டக்காற் குடலுட்பொருமிப்புளித்தேக்காய்
உலையும் புண்போல் நாற்றமுண்டா யுழலை மிகுத்து வலியுண்டா
நிலையுங் கெடவே மந்திகரும் பித்த குன்ம மெனநிகழததே

தேகம் வரண்டு தாகமுண்டாய்த் திரளும் வாயு குலைமீது
நோகுந் துயர மிகுந்திருக்கு நோக்குங் கெட்டு மஞ்சணிக்கும்
மோக மிகுந்து வாய்நீரு மூறிப் பொருமி வாந்திக்கும்
தோகை யனையீ ரழற்சியுறுந் தோன்றும் பித்த குன்மமிதே

மிண்டிமுன் வயிற்றைப் பற்றி மிகைபட வலிக்க லாக்கும்
கொண்டுநின் றாகாரத்தைக் குமட்டியே யெடுக்க லாக்கும்
மண்டிநின் றெதிரெ டுத்து வயிற்றையே வலிக்க லாக்கும்
விண்டுதான் பித்த குன்ம மீதென விளம்பி னாரே



லையுங் கனத்தே யோங்காளந் தறுகா மந்தம் வாயூறல்
லையுங் கெடவே கிறுகிறுத்து நின்றே வேர்த்துநெஞ்செரித்துக்
காலையுஞ்செய்யும்பித்தகுன்மங்கொல்லுங்குணங்களிவையெனம்
லையும் வல்ல தமிழ்வாணர் கண்டே பெருகப் பேசினரே 7

**2-சேத்பனகுன்மம்**

ண்டொடி கேளாய் வாய்நீ ரூறியே வழுவ மூக்கும்
தாண்டைநொந் திரும லுண்டாந் துடியென விடிக்கு நெஞ்சு
காண்டிடு மசன நின்று குழம்பியே வாந்தி செய்யும்
மிண்டிட வயிற்றைப் பற்றி வலித்திடும் விளர்க்க மேனி 8

ரித்திடு நெஞ்சு காந்துங் கவ்விடுங் குலையைப் பற்றி
ரித்திடு முடம்பு வேர்க்கு மிடருற வயிற்றில் நோவாம்
பொருத்துறு மசைவை யெல்லாம் புண்படக் குத்தி நோவாம்
ரிக்கயல் விழியாய் சேற்ப குன்மத்தின் வகையி தாமே 9

**3-எரிகுன்மம்**

வயிற்றையெரித்துக்குடல்குமட்டிவாய்நீர்பெருத்துத்தலைகனக்கும்
உயிர்ப்பை யழியக்கிறுகிறுக்குமோங்காளித்தேயேப்பமுண்டாம்
யிர்க்கால் வழியே வேர்வரும்பி வயிறு பொருமி மந்திக்கும்
வயற்றி யெரிக்குங் குன்மமென முனிவன் சொன்னகுறியிதுவே

**4-சூரைகுன்மம்**

காலவே யுதரந் தன்னிற் றப்பளை போற்றி ரண்டு
லவே யுடம்பு வற்றி யிடுப்புளைந் திரையும் வாயு
காலெலா மிகவே யோயுங் கருதிடு மன்னஞ் செல்லா
கோலமார் குழலி னாளே சூரையாங் குன்ம மாமே 11

**அசாத்தியம் -காலில்**

**1-வாதகுன்மம்**

உடம்புகால் குத்தி நொந்தே யூதையு மிகுந்து விம்மும்
நுடங்கிடை மின்னே யீரல் நுனியிடைத் திரண்டு நோவாம்
இடம்பெற விலாவி ரண்டு மேறிவே தினையாய் நோகும்
திடம்பெற வாத குன்மஞ் செய்குறி யென்று செப்பே 12

ஈரலு நெஞ்சும் பற்றி யெரித்திடு முளையும் பக்கம்
கார்செறி கபாலந் தானுங் கனத்துடல் புரட்டிச் சத்தி
நேர்படக் கிறுகி றுத்து நினைவறக் குடல்வ லிக்கும்
வார்பொரு முலையாய் வாத குன்மத்தின் வகையி தாமே

ஊளையு முடம்பு தனிலெங்கு முளையா திருக்கி லுறுப்புளையும்
களையு மிகுந்து வயிறழற்றுங் கனக்க வாய்நீ ருவாந்திப்பாம்
விளையும் வெப்புத் தானுண்டாம் விடாதேவேர்க்குந்தலைகனக்கு
வளையும் பிறைபோ னுதலணங்கே வாத குன்ம வகையாமே

சந்துகா லுளைந்து பற்றித் தழலெழ வயிற ளாவி
அந்தகா ரங்க டம்மி லதினமாய்ச் சரீர வாதை
வந்துதான் றோன்று நாளில் வகைபடும் வாத குன்மம்
அந்தமா முனிவர் சொன்ன வாயுறு வேத நூலே

## 2-சத்திகுன்மம்

நெஞ்சுமெரித்துப்புளித்தேக்காய்நின்றேயுதாம்பொருமலுமாய்த்
தஞ்சமறவே சத்தியுமாய்த் தாகத்துயரான் மூலந் தீயும்
மஞ்சட் பித்த வாயுவிது வதிகப் படவே பகைத்ததெனில்
அஞ்சுஞ் சத்தி குன்மமென வறைந்தார் முனிவ ராராய்ந்தே

சோறு செரிக்கில் வயிறதுநோந் தொடர்ந்தே வாய்நீ ரூறிவரும்
மீறுஞ் சத்தி வருமாப்போ லிருக்கு மெடாது நெஞ்செரிக்கும்
வேறுங் குமட்டி யெடுத்திட்டால் வேதினை மாறுமுடல்வேர்க்குந்
தேறுஞ் சத்தி குன்மத்தின் செயலீ தென்று செப்பினரே

## 3-வலிகுன்மம்

பண்டுள பழம லத்திற் பயிரத்தியஞ் சேர்த லாலும்
கொண்டிடுங் கஞ்சி தண்ணீர் கொதிப்புடன் வெதுப்பி னாலும்
மண்டியே காயம் வற்றி மயங்கெட வுலர்த லாலும்
வண்டுசேர் குழலி னாளே வலிகுன்ம வாயு வாமே



### (மற்றொருபிரதியின்படி)

பண்டுமுள் வயிற்றைப் பற்றிப் பலபட வலிக்கை யாலும்
கொண்டுநின் றாகா ரத்தைக் குமட்டியே யெடுக்கை யாலும்
மண்டிடு முடம்பு வாடி வலுவற வுலர்த லாலும்
விண்டிடு முனிவர் சொன்ன வலிகுன்ம மென்னும் வேதம் 19

வந்தே யுதரம் பொருமலுமாய் வயிறுங் கழியு மந்திக்கும்
நொந்தே மேனி வரண்டுலர்ந்து நோயு மிகுந்து வலியெடுக்கும்
தந்தால் மருந்து தனைமீறுந் தாகத் துயரா மலந்தீயும்
வெந்தே விழுந்து போமளவும் விடாதே யம்மா வலிகுன்மம் 20

## 4-சூலகுன்மம்

திரளும் வாயு குலைமீது சிக்கு மலமு முடம்பெங்கும்
உலையுங் குத்து முதரத்து மூறுங் கருவி முனைபோலப்
புரளும் வாய்நீ ரூறிமிகப் பொருமு மேப்பம் புலால்நாறும்
வரளு முடம்பு மிக்குணங்கள் சூல குன்ம வகையாமே 21

## சிகிச்சை

### இஞ்சிக்குழம்பு

மேவிய விஞ்சிச் சாறு பதக்கிலை டித்து விட்டுத்
தாவிய தும்பை நொச்சி தைவளை பிரண்டை யோடு
கூவிய வெருகு மேனி குலவிய வுவாய்க ரந்தை
தாவிய வெருக்குக் கையா னிவையொன்று சாறு நாழி 22

நாடிய வுவாய்வேர் நொச்சி நவில்திரி பலையி னோடே
ஏடவிழ் வன்னி தானு மியம்பிய சித்ர மூலம்
பீடுற விவைக ளொன்று பதின்பல மெட்டொன் றாக்கிக்
கூடிய சுரசத் துள்விட்டிதுதனைக் குறுகக் காய்ச்சே 23

காய்ச்சிடு குறுகி வந்தாற் சர்க்கரை பலம்பத் திட்டு
வாய்ச்சிடு கற்கஞ் சுக்கு மிளகுதிப் பிலிவ சம்பு
கூச்சமி லிருசீர் காந்தங் கொள்கடு விளங்க முப்பைந்
தோச்சமாங் கார மைந்து சாரமைந் தொக்கக் கூட்டே 24

கூட்டுமுக் கழஞ்சொவ் வொன்று குணமுற விடித்த ரைத்தே
ஈட்டிய மருந்து நன்றா யிளாய்ந்திடு பதத்திற் றூவி
வாட்டடங் கண்ணினாய்கேள்வளர் தேன்னெயயெண்ணெய்விட்டு
நாட்டமாய்க் கிளறிக் காய்ச்சி நற்பதத் திறக்கி யுண்ணே 25

### உள்ளியாமணக்கெண்ணெய்

வெள்ளுள்ளி யிஞ்சி நொச்சி வேளைசா ரணைபி ரண்டை
ஒள்ளிய முருக்குத் தும்பை யுவாய்மேனி யெருக்குக் கள்ளி
துள்ளிய நிலத்தில் வாகை துவைத்தொன்று சாறு நாழி
அள்ளிலை நெடுவேற் கண்ணா யாமணக் கெண்ணெய் நாழி 26

சாற்றினில் விட்டுப் பின்னர்ச் சாரடை வன்னி வேலி
ஈட்டுவெண் ணொச்சி வாத மடக்கியோ டெருக்கு வெட்டி
நாட்டமா யிவற்றின் வேர்கள் பலம்பத்து வகைக்குக் கூட்டி
மீட்டுநாற் குறுணி நீரில் விரவியெட் டொன்றாக் காய்சசே 27

காய்ச்சிய கஷாயஞ் சாறுங் கலந்துமேன் மருந்து கேளாய்
வாய்ச்சவெள் ளுள்ளி ரோணி மஞ்சளு மைந்து சாரம்
கூச்சமில் கார மைந்து கொளதிரி கடுகு வாளம்
ஓச்சமாம் விளங்கங் காந்த மோமம் வெந்தயமுங் கூட்டே 28

ஏலமுப் பலைவ சம்பு மிருசீர மிவையோ ரொன்று
சாலவே கழஞ்சு கூட்டிச் சாரித்துத் தயிலம் வெந்து
காலமே கடுகி னோடு கரண்டிநாற் பதுநாட் கொள்ள
ஆலமுண் டிருண்ட கண்ட ரருளினாற் குன்மம் போமே 29

### முட்காவேளைக்கிருதம்

வன்னிவே ராறுபலம் வேலி பத்து
மானேசா ரடை†கொழுஞ்சி யுவாயும் வேளை
முன்னேவச் சிரவல்லி வில்வஞ் சிற்றா
முட்டிவே ரிவையொன்று பலம்பத் தாக
நன்னீரெண் மரக்கால்விட் டெட்டொன் றாக்கி
நறுநெய்யு மீரிரண்டு நாழி விட்டுச்
சொன்னதிரி பலைகடுகு சிவதை ரோணி
சொன்மருந்து பலமைந்தெட் டொன்றாய்க் காய்ச்சே 30

†நூறுபலம் என்றும் கொழுஞ்சி-முட்காவேளை



ாய்ச்சமருந் தினையிடித்துச் சுரசத் தோடு
கலந்துவிட்டு மேன்மருந்து கடுகோ டுள்ளி
ாய்ச்சவிரு சீரிந்து சோம நாதி
வசம்போம மாஞ்சரத்தை சாதிக் காயும்
ச்சமுறு பொரிகார முலுவா மோத
மோரொன்று நாற்கழஞ்சிட் டுவந்து வெந்தாற்
ச்சமற மண்டலங்கொள் குன்ம ரோகங்
குடிபோமென் றேமுனிவன் கூறினானே 31

### வில்வாதிலேகியம்

விளைவேர் பலநூறு சிற்றா முட்டி
கொள்தூது வளைநொச்சி யாடா தோடை
ாவுதிரி கடுகுதிரி பலையொவ் வொன்று
பதின்பலங்கொண் டிடிதுநீ ரெட்டொன் றாக்கி
விரைந்து திருமேனி கையா னொச்சி
நீர்முள்ளி யெருக்கவுரி நேரார் காணம்
வியமே யிவையொன்று சாறு நாழி
யொன்றித்து மேன்மருந்தை யுரைப்பக் கேளே 32

ாதிக்காய் பத்ரியோ டுள்ளி காயஞ்
சாற்றிமிரு சீர்விளங்கஞ் சாத்ர பேதி
தியவுப் பைந்துடனே கார் மைந்து
முயர்சார மைந்தினுட னன்ன பேதி
தியுட னிரண்டுகழஞ் சிதுக் கொண்டு
நிகழ்த்துமருந் ததுகுறுகி வாற நேரம்
தமுறு சர்க்கயெண் பலமு மிட்டுத்
திகழ்பாகி லிம்மருந்து சிறக்கத் தூவே 33

ாவியே நறுநெய்தே னிஞ்சி யெண்ணெய்
சொல்லுமள வாய்க்கூட்டிக் கிண்டி வெந்து
ாவியே பதம்வந்தா லிறக்கிக் கொண்டு
சாருமள வறிந்துண்ண மண்டலத்திற்
ாவியே நிகர்விழியாய் குன்மந் தீருங்
கதிரைமலை முதல்வனருட் கருணை யாலே
மவியே பொதிகையினிற் றமிழு ணர்ந்த
மிளிர்தவத்துக் குறியமுனி விளம்பி னானே 34

**சித்திரமூலக்குழம்பு**

சித்திரமூ லக்குழம்பு திண்புவியிற் சேயிழையே
பத்தியுடன் கூட்டும் பரிசுகேள்- முத்திதரும்
வில்வம்வேம்வேர் சாரடைவேர் †வெற்பதனைத் தாங்கியவேர்
நல்லவுவாய் வேர்நானாங் கள்ளிவேர்- சொல்லரிய
வஞ்சகத்தார் ‡முப்புரத்தை வன்னி யெழுப்பியசேர்
வெஞ்சுரத்தை மேவுவச்ர வல்லிவேர்-செஞ்சொலீர்
சிற்றா மணக்கின்வேர் சிறந்தகரு நொச்சிவேர்
மெச்சுபுகழ் வாகைவே ராயில்வேர்-இச்சைசேர்
தைவளைவேர் முன்னைவேர் *சந்துநடந் தான்வேரும்
ஐயறுக்கும் வெய்யகண்டங் கத்தரிவேர்- துய்ய
கொழுஞ்சிவே வேர்முருங்கை வேர்கூ
றழிஞ்சிவேர் வாத மடக்கி- செழும்பவளம்
போலித்தீழ் ரொவ்வொன்று நாலொன் பதுபலமும்
சீலமுட னேதறித்துச் சேர்த்ததற்பின்- வேலனைய
கண்ணீர் கொடுவேலி காட்டுமிரு நூறுபலம்
நண்ணீர் தனிற்கொணர்ந்து நன்றாகப்- பண்ணமைந்த
சாடிதனி லிட்டுச் சலிலநாற் றூணிவிட்டு
மூடிக் கனல்சிறுகத் தான்மூட்டி- நாடியே
எட்டொன்றாய்க் காய்ச்சி யியல்பதலை வாய்சீலை
கட்டி வடித்த கஷாயமதில் - இட்டமுறும்
இஞ்சி கருவேப் பிலைநொச்சி யோடவுரி
வஞ்ச மகல்சா ரடைபிரண்டை- நஞ்சு
பொதிந்த கொடியும் புடோலு முருக்கு

†வெற்பதனைத்தாங்கியவேர்- பொன்முசுட்டைவேர்.
‡முப்புரத்தை வன்னியெழுப்பியவேர்- மாவிலங்கைவேர்.
*சந்துநடந்தான்வேர்- சிவனார்வேம்புவேர்.

கதிந்தகுப்பை மேனியுடன் கையான் - முதிர்ந்த
வனசப் பொகுட்டு வளமுறவே யெல்லாம்
தனியிறுத்து வெவ்வேறு சாறாய்- நினைவுடனே
ஒன்றொன்று நாழியா யுள்ள துகாய்ந் தொட்டொன்றாய்



வென்றியுடன் கோததனில் வீழாமல்- நன்றியாய்
ன்சொல் கஷாயத்தில் மூழ்கவிட்டுக் கூட்டிய
ின்பு மிகுகடுக்கா யாயிரமும்- துன்னபறத்
ள்ளும் விதையகற்றித் தான்றூணி நீர்புகட்டிக்
கொள்ளமது நானாழி யாய்வடித்து- மெள்ளவது
ட்டுங் கஷாயமதிற் கூடவிடு மேன்மிளகு
ாட்டிமையாய் நானாழி தான்கொணர்ந்து- கூட்டி
இடித்துப் பதக்குநீ ரெட்டொன்றாய்க் காய்ச்சி
படித்துக் கஷாயமதில் வார்த்து- வெடித்த
ிவதை பலம்பத்துச் சேர்கடுகு ரோணி
வறா ததற்குச் சமனாய்- நவமுறவே
ட்டி யிடித்துநீ ரெண்ணாழி தன்னையே
ட்டி யிருநாழி யாக்கி நாட்டமுடன்
சொல்லுங் கஷாயமதிற் சூட்டிப் பனையிலுறு
வெல்லம் பலமிருபான்விட்டதிலே- நல்லதொரு
வெள்ளுள்ளி பத்துப் பலமரைத்து மேன்மையுற
உள்ள கக்ஷாயத்தி லூட்டியே மெள்ள
அடுப்பதனி லேற்றி யலர்ந்தகமலா க்கினியாத்
திடுக்கமற மூட்டிச் செழும்பா- கடுத்ததனிற்
ட்டுகின்ற கற்கங் குலச்சரக்கின் றன்குறிப்பை
ாட்டமுடன் கூறுகே நன்றாகச் -சூட்டரிய
க்குப் பதின்பலமுஞ் சொன்மிளகு மப்படியே
அக்கரையாந் திப்பிலியோ ராறுபலம் -தப்பாமல்
இந்துவினுப் பெண்பலமு மேற்ற வளையலுப்பும்
அந்தப் படிகூட்டு மட்டுப்பும்- வந்தெதிர்ந்த
ஒன்னாரைக் கொல்லும் வெடியுப்பு முன்னுப்பப்
ன்னாக முன்சொற் பலங்கூட்டி - நண்ணரிய
சோமன் பெருங்காயஞ் சொற்றபடி நாலுபலம்
நாமஞ்சேர் காந்தமது நாலுபலம்- ஓமம்
விளங்கமிரு சீரகமோ லேமிவை யொன்று
விளங்க விருபலமாய் மேவிக்- களங்கம்
அறுக்குஞ் சவர்க்கார மானபொரி காரம்
முறுக்கு தும்பச் சாரஞ்சத்தி சாரம்- குறித்த
நவச்சாரங் காரமைந்து நாகெந்தி மூலம்

நலமாம் விடயங் கராம்பும்- உவமானம்
மேவும் பலமாய் விளைவு பெறுமிரசம்
தாவும் பலமொன்று தன்னையே- நாகமதில்
ஊட்டிக் கிளறிநின்றா யூதப் பொடியாகும்
மாட்டி யதையரைக்கும் வண்மைகேள்- நாட்டும்
முதிரை யறுநாழி மூழ்குநீர் தானும்
அதிலே படியாறு கூட்டி- மதியுடனே
காய்ச்சியது நாற்படியாய்க் கண்டா லிடித்திறுத்து
வாமியப்புடனே விட்டு மருந்தரைத்துக்- காய்ச்ச
அலகைதரு கொம்மடிக்கா யச்சாறு நாலு
குலவுபடி விட்டுக் கூறும் - பலமுடைய
நற்குழம்பாய்க் கிண்டிவெந்த நல்லபரு வத்தினிலே
முப்படி யாமணக்கின் முற்றுமெண்ணெய் - தப்பறவே
விட்டுப் புளிபோல வெந்தபரு வம்பார்த்துச்
சட்டெனவே கீழிறக்கிச் சாற்றக்கேன் - கட்டம்
அகற்றும் விநாயகன்மு னம்மருந்தை வைத்துச்
சகத்திற் கடலையவல் தாமும் - உகப்பான
நெல்லின் பொரியிளநீர் நேர்ந்த பழவகைகள்
எள்ளுருண்டை யாதி யிவைமைத்து – நல்ல
நிவதனங்கள் பண்ணி நிமலாவென் னோயின்
அபாய மகற்றி யருளென் - றெவாயும்
பணிந்துநல்ல நாளிற் பகர்மருந்தை யுண்டாற்
தணிந்துவிடு நோய்களையே சாற்றில் - திணிந்து மிக
வந்தவட்ட குன்ம மகோதர நீராம்பல்
முந்துபே ராம்பன் முதற்கவிசை சிந்தை
மயக்குமடு விற்புருதி வார்குருதி யோடு
தியக்கமுறுஞ் சீல்கட்டு விற்புருதி – கயற்கடை யீர்
அண்டத்தில் வாத மலறுங் குடல்வாதம்

தண்டத்து வாதமுடன் சார்சூலை – குண்டலத்து
வாயுவெப்புப் பாவை வளரும் பலவாயு
காயும் பலநோய் கடிதகலும் - நோயுற்ற
மானிடர்க்கு வந்தபிணி மாணுங் கதிரைமலை



தானிடமாக் கொண்ட தனிமுதல்வன் - மானிடத்திற்
கொண்ட சிவனார் குமரினவன் முகவன்
முண்டகச்செம் பாதமலர் முன்னியே தெண்டனிடும்
அன்பர்வினை நீங்குதல்போ லாமென் றகத்தியனார்
முன்பருளிச் செய்த முறை 35

**நாரத்தங்காய்க்குழம்பு**

நாட னானதோர் நாரத்தங் காய்பத்து
நன்றாய்க் கீறி யிடித்தரை நாரியே
கூட வேபதிற் கூட்டு மருந்துகள்
கூறக் கேளுங் குவலயத் தோர்களே

குப்பை மேனி கொழுஞ்சி புளியிலை
கூறு நொச்சி யுவாயிலை .....வளை
செப்பெருக்கு முருக்குப் பிரண்டையும்
சித்ர மூலி கொடிக்கள்ளி தும்பையும்

உள்ளி சாரடை யிஞ்சி கருவேம்பு
முத்த மாகாணி கொம்மட்டி †கொக்கரி
துள்ளு நீர்மேல் நெருப்பிலை வீழியும்
தூக்கு மானை வணங்கி யிவையெலாம்

வாட்ட டங்கண் மயிலே ‡யிருபது
மருந்தி லொன்றும் வழுவாது சொல்லக்கேள்
வேட்ட மாகப் பறித்துத் துவைத்திட்டு
மேவுஞ் சாறொன் றுழக்காகக் கூட்டியே

†நோகரி என்றும் பாடமுண்டு ‡எண்ணுமிடத்து 22 காணப்படுகின்றன

வடித்துக் கொண்டாரு தாளியில் விட்டதில்
மன்னு நாரத்தங் காயு மகிழவே
கரைத்துப் பின்னுங் கஷாயம் விளம்புவேன்
........................ மின்னனாய்

முக்கடுக முப்பலையு முடுகுரோ கணிசிவதை
முருங்கைவேர் நிலவாகை கொடுவேலி யாயிற்
பட்டையுட னாமணக்கின் வேராகவேபதி னாலுஞ்சமன் கொண்டு

நீத றித்திடு தோயம் பதக்கிடு
நீங்கி டாதெரி நாற்படி யாயினும்
சாதி சேர்பனை வெல்லம் பலமெட்டுச்
சாரித் தேயெரி தண்ணீர் சுவறவே

மேலுங் கற்கம் விளம்புவன் மின்னனாய்
வெய்ய சூத மிலிங்கஞ்செங் காந்தமும்
ஏல மோம மிருகடு சோமனு
மிந்து ரோணி சிவதை வசாவுள்ளி

மோக நாவி யுடனன்ன பேதியு
முன்னும் வாயு விளங்கநற் சீரகம்
தாக நீக்கு முலவு கருஞ்சீரஞ்
சத்த வர்க்கஞ் சவுட்டு வில்லையுடன்
சாரு முக்கடு முப்பலை சாதியும்

துத்த முந்துரி சுங்குள விந்தமும்
சூத்திர நாவி யிருவி நிருவிடம்
உப்புஞ் சாரமுங் காரமு மூவைந்து
மோரொவ் வொன்று நிறுமுக் கழஞ்சதாய்க்
செப்புஞ் சுத்திசெய் வாள மொருபலஞ்
சேருங் கெந்தகத் தோடிர சந்தனை

அந்த மாயரை கோசலம் விட்டதை
யார வேகுடி நீரி லளாவியே
வெந்தி டுங்கம லாக்கினி யாகவே
மேவு மாமணக் கெண்ணெய் படிவிட்டுச்
சேரக் காய்ச்சிப் பதமெழு காகவே
திரளும் பக்குவந் தன்னி லிறக்கியே
வீர வானை முகத்தன் முன் னால்வைத்து
வேண்டு நைவேத் தியங்கள் கொடுத்தபின்.............................



...ற வைத்துப் பா ணியி லிட்டதை
யருந்துந் தானியத் தேபுட மாகவே

...று நல்ல கிழமை முகூர்த்தத்தில்
கொள்ளு நீள் புன்னைக் கொட்டை யள்வதாய்
...றி டாதொரு மண்டலங் .....ள்ளவே
வற்சி தம்புளி மந்தப் புசிப்பையே

...ந நோய்களை யிப்போது கூறவே
தெளிந்து கொள்ளுஞ் சிவனடி யார்களே
...ர மான வுதரத்துள் ளேமிகப்
பற்றுஞ் சூலம் பெருவயி றாதியாயக்

...ன்மங் காமாலை பாண்டு வுரோகமுங்
கொடிய வாயுக் கிராணி கவிகையும்
...ன்ம மான குடகிரி கெண்டையும்
மந்த வாயு செரியாமை வாந்தியும்
...ம சூலை யதிசார வூதலு
மக்கி மந்தம் பிலிகை யகுவையும்
...ம மான மகோதர வீக்கமு
மெய்ப்பி ளைப்பொடு நெஞ்செரி சோகையும்

...க்க வாயு வுடனண்ட வாயுவும்
பலப டச்சோறு செரியாத வாயுவும்
...க்க நின்று குறுமறுக் கிட்டது
முள்ளில் நின்று வலிக்குமோங் காளமும

...டலில் வாயுவுங் குண்டல வாயுவுங்
கோரை வாதமுங் குறித்த சிரேட்டமும்
...டலி லேப்பம் புளித்தேப்பம் விக்கலு
முரத்த வாயு வொடுகொர்ப்ப சூலையும்

காய பாண்டுவு மாம்புலு மந்தமுங்
கடிய சத்தி பசலையு ரோகமும்
வாயு வாகத் திரண்ட வகைக்கெலா
மாற்ற நல்ல மருந்திது வாகுமே

ஆறு நல்ல வரியு மரவமு
மாரஞ் சூடு மானா ரருளினால்
தேறு நெஞ்சந் தெளியுமென் சிந்தையே
செம்பொ னம்பலங் கண்டவர் பாவம்போல்
ஓடு மோடு முடம்பிற் பிணிகளு
முதர நோஷ முளவெவ் வகைகளும்
நாடி யேயிது செய்யு மனிதரே
நாரத் தின்காய்க் குழம்பென்று பேர்சொல்லே

### கும்மடிக்காய்க்குழம்பு

அலகையதின் கும்மடிக்காய்ச் சாறு நாழி
யதினளவே சம்பீரப் பழத்தின் சாறு
குலவுசெறி நொச்சியிலைச் சாறு நாழி
கொள்ளுமிஞ்சி வெள்ளுள்ளிச் சாறு நாழி
சலமறவே காய்ந்துவற்றி நாழி யானாற்
றமிலொக்கச் சாதிலிங்கஞ் சூதங் கூட்டி
நலமுடைய வெண்காரஞ் சோம னுப்பு
நற்கடுகு மோதகமு நயந்து கொள்ளே

கொள்ளுவது மிளகுமஞ்சள் வெந்த யங்கொள்
குலவியதோர் நேர்வாள நூறுங் கூட்டி
உள்ளதொரு நிறைமூன்று கழஞ்சு கொண்டே
யொக்கவரை யொன்றுபட வளாவிக் காய்ச்சி
மெள்ளவது பளப்புளிபோற் பதமே வந்தால்
விரைந்திறக்கித் தூதுவளம் பழம்போ லுண்டை
கொள்ளிடவே குன்மமெட்டுப் பிலிகை வாயு
கூறியதோ ருதரநோய் குலைந்து போமே



### கும்மடிக்காய்க்குழம்பு-2

பய்க்கொமட்டிக் காய்ச்சாறு நாழி யொன்று
பேசெலுமிச் சம்பழத்தின் சாறு நாழி
ாய்க்கடுகு மேனிசா ரடைபி ரண்டை
நானாவேர் நொச்சிதும்பை
ாய்ப்புறுவெள் ளுள்ளியிஞ்சி யுவாய்தை வேளை
மருந்தொன்று நீர்நாழி வற்றக் காய்ச்சிக்
ாய்ப்புறவே நானாழி யான வாறே
கடுகுரோ கணிசிவதை கருஞ்சீர் காயம்

ாந்தமுட னுப்பைந்து சார மைந்து
காரமைந்து துரிசுதுத்தங் கருது மஞ்சள்
ந்திழையே சாதிலிங்கஞ் சூத நாவி
யிருவிநெல்லிக் கெந்தகமு மினிய மோதம்
பொந்ததிரி கடுகுதிரி பலைவெள் ளுள்ளி
பூவையே வெந்தயமுங் கடுகு பூவும்
ஆய்ந்துநிறு முக்கழஞ்சு சுத்தி வாள
மதுவுமிடை சமன்கூட்டி யரைத்த ளாவே

வலிவேர் வன்னிநில வாகை வேரும்
மிக்கவுவாய் நானாவேர் வீழி வேரும்
ஆலவிழி மானேசா ரடைகொ முஞ்சி
யவையொன்று பலம்பத்து வரித கீயும்
லுந்நீர் தூணிவிட்டே யெட்டொன் றாக்கி
யிறுத்ததிலே கூட்டியே ரண்ட வெண்ணெய்
கோலியொரு படிவிட்டுப் பனையின் வெல்லங்
கூட்டியொரு பலம்பத்துக் குறுகக் காய்ச்சே

ாய்ச்சுபழப் புளிபோலப் பதமே வந்தாற்
கருதுமுண்டை சுண்டைக்கா யளவே கொள்ளக்
ச்சமற மண்டலத்தி லுதர தோஷங்
குன்மமகோ தரமெகுவை பிலிகை கெண்டை
ச்சமுறு நீராமை கொர்ப்ப சூலை
யுடன்சூலம் பெருவயிறு வுந்து வாதம்

வாய்ச்சதொரு கவிசையிவை யெல்லாந் தீரு
மலையமுனி யருந்தமிழின் வகுத்த வாறே

**இஞ்சிக்குழம்பு**

ஏலக் குழலாய்க்கே ளிஞ்சிக் குழம்பின்வகை
நூல்கற் றறிந்தார் நுவன்றபடி – மேலான
இஞ்சியினீர் தான்குறுணி யீதினெல்லிக் காய்ச்சாறு
கிஞ்சுகமா நொச்சி கிளர்பிரண்டை – மிஞ்சிய
பேய்ப்புடோல் வேளை பெருந்தும்பை சீந்தில்கையான்
வாய்ப்புறு சாரடை வன்கொழுஞ்சி – காய்ப்பார்
சிறுதும்பை நீலியுவாய் செய்யநில வாகை
உறுமுள்ளி சாறோர் படியாய் - மறுகவே
வன்னி கொடுவேலி மன்முக் கடுகுபலை
துன்னு நிலவாகை சொன்னபடி – மின்னே
முதிரையுடன் வெண்ணொச்சி முற்றிய வீழி
கதிர்தழு தாழை கழற்சி – பொதியவிழும்
வில்வவேர் வேப்பலகு மென்மிழகு தான்றிவேர்
புல்லு மெருக்குப் புனர்நவமும் - சொல்லுமருந்
தொன்று பதின்பலமா யொன்றித்துத் தூணிநீர்
துன்ற வெரிகுறுணியா ய்ச்சுவற – நன்றாய்
வடித்துக் கஷாயமதில் வார்த்து வளமாய்
அடுத்தபனை வெல்லமது பத்து – மிடுக்காக
வேகரைத்து விட்டளவி மேன்மருந்து முக்கடுகு
தாவிய முப்பலை சந்தனமும் - தீவிய
காந்தம் விளங்கங் கடுரோணி காயமுள்ளி
போந்த விருசீர் புதுவில்லை – ஆய்ந்த
கடுகு சிறுகடுகு கார லவணம்
முடுகிய சாரமுடன் முந்த்ரி – அடைவான
நேர்வாள மோமமஞ்சள் நேரிய சீரேலம்
கார்கோல் முதலாறுங் கல்நாரும்- கூரிய
தாளிச பத்ரி சடாமாஞ்சில் செண்பகப்பூ
நீளிய கோட்டஞ் சிறுமூலம்- வாள்விழியாய்
அட்டி மதுர மரிய தகரமுடன்
கட்டான் கர்ப்பூரங் கண்டில்வெண்ணெய்- மட்டவிழும்



னியுடன் சிற்றரத்தை தேறு வசம்பரத்தை
னுறையுங் குங்குமப்பூக் கன்மதமும் -மானேகேள்
காரோ சனைப்பிசினுங் கோதையே யிவ்வெல்லாம்
ரோர் பலங்காலா யொன்றித்து- நேராய்
டித்தத்திற் றூவி யிளகவே கிண்டித்
டுக்கமற வேரண்ட நெய்சேர்த்- தடுக்காக
ற்பதத்தி லேயிறக்கி நாற்பதுநாட் கொண்டுவரிற்
சாற்பெறு பித்தந் துளக்கெரிப்புத்- தார்க்கமுறு
ாயுத் திரட்சி வலிகுன்மஞ்- சத்தி குன்மம்
ுயும் பிலிகை யகுவையுடன் -மாயமாம்
க்கினி மந்த மதிசாரம் வாய்க்கசப்புப்
க்கத்தில் வாயு பரதாகம் -மிக்க
ிகுன்மங் கைகா லெரிப்புச் செரியாப்
பாருமிடும் வாயு புளிப்பு - மருவிய
த்திர வாயு வரைச்சோ றுடன்கழிதல்
த்தனையுந் தீருமென வெண் 43

**சஞ்சீவினிரசம்**

த நாவி யிருவி நிருவிஷஞ்
சொல்லுஞ் சூத்திர நாவி மனோசிலை
தும் வெள்ளைப்பா ஷாணநற் கெந்தக
முற்ற தாளக மோடெவச் சாரமும்
த ரோகணி பாள மிவைசமன்
பேத கம்மரச் சுத்தி தனித்தனி
சோதி யாமத் தெருக்கு முருக்கிலை
தும்பை நொச்சிவெள் ளுள்ளியோ டிஞ்சியே 44

ந்த நீர்விட் டரைத்துக் குகையிலிட்
டேழு சீலைமண் செய்து கெசபுடம்
ந்த வெந்த மருந்தத னோடுநீ
முதிய தாம்பிரம் வங்க முலோகமும்
ந்த சூத மிவைபற்ப மோரொன்று
வகைக்கி ரண்டு கழஞ்சது கூட்டியே
ந்த ரம்பெறு முள்ளித் தயிலத்திற்
றுலங்க மத்தித்துத் தோன்றும் பணவிடை 45

பஞ்ச மூலக் கஷாயத் திடக்குன்மம்
பாறு மிஞ்சிச் சுரசம் பயித்தியம்
அஞ்சி யோடும் பொருமல் வலிப்புக
ளாம ணக்கெண்ணெய் தன்னிற் கொடுத்திடு
மிஞ்சு சூலை கடிவிஷந் மிகுவாத ரோகத்துக்
கஞ்ச மேனியின் சாற்றிற் கொடுத்திடு
மனேக ரோக மறுக்குஞ்சஞ் சீவினி

**குடோரியும் இரட்சையும்**

உதரமீ துந்த ரோக வுறைப்பினிற் குடோரி செய்யப்
புதையவே கொம்பி னாலே பொருமிய சோரி வாங்கி
இதமுறு சூலக் காலாங்கருவியை யழத்திக் கொண்டு
பதமுற விலாவி ரண்டும் பரந்தெழு வியாதி மீது

அறிவுசெய் புண்ணிற் கார மடுக்கவைத் துண்ம ருந்து
குறியுறு சிகிச்சை செய்தாற் குன்மநோய் மகோத ரங்கள்
தெறியுறு நாபி சூலந் தீர்ந்திடுங் கவிசை சூலை
அறியுறு முனிவர் சொன்ன வகையெலா மறிந்து கொள்ளே

**இரத்தகுன்மத்துக்கு**

நல்லோ ருரைத்த பெருங்கிழங்கு நவில்சம் ரணைவேர்கொடுவே
சொல்லா ரெருக்கம் வேர்கள்ளித் துளிருங் கருவே லிலையுடனே
எல்லோர் விரும்புஞ் சாதிக்கா யிந்துப் பிருசீ ரகம்வசம்பு
வல்லீர் கடுக மூன்றோமம் வகையே பெருங்கா யமும்மருவே

மருவீ ரிவையொன் றிருகழஞ்சு வகையே கடுகுப் பொடியுழக்குக்
கருதீர் பலம்வெள் ளுள்ளியொன்று கலந்தே யிவைகளொருகூறு
பெருகார் திலத்தின் பிண்ணாக்குப் பிறித்தேயிடித்தங்கொருகூறு
விரைவாய்க் கலந்து தூள்குப்பைமேனிச்சாற்றிலரைத்துவையே

அரைத்துச் சுண்டைக்காய் போலவருநல்லெண்ணெயிற்றோய்த்து
திருத்தமாய் விடிந்தபோதிற் றின்றிட வல்லீ ராகில்
வருத்தமா மிரத்த குன்ம மாறிடு மென்று மண்மேற்
பொருத்தமாய் முனிவ ரெல்லாம் புகன்றனர் மருந்து தன்னை



குன்மவிதி, என்னும் தலைப்பின்கீழ் அடியில்வருவனவும் மேற்கண்ட
...ற்றோடு சிற்சிலபிரதிகளிற் காணப்படுகின்றன.)

**குன்மவிதி**

**குன்மம் எட்டின் பெயர்**

...மருவிய வாயு குன்மம் வாதகுன் மங்க ளோடு
...ருவிய பித்த குன்மந் தாளெரி குன்ம மாகும்
...ாவிய வலியாங் குன்மம் பரந்தெழு சத்தி சன்னி
...விரவிய வையின் குன்ம மிவையெட்டும் விளம்பு வேனே 52

**1-வாயுகுன்மம்**

...சோறு தானுஞ் செரியாது துருத்தி போலே யாம்வயிறு
...றும் பெலனுந் தான்கெடுக்கு முடலு முலரு நடைகுறையும்
...வீறு பந்து போற்புரளும் வில்லுப் போலும் விசையாகும்
...றும் வாயுக் குன்மமென விசைந்தார் முனிவ ரிக்குணமே 53

**சிகிச்சை-எருக்கலம்பாற்றைலம்**

...வாகான நல்லெண்ணெய் வெள்ளா டதின் கீர
மருவிய வெருக்கிலுறுபால்
...வளமான நொச்சிலும் புளியிலை பிரண்டையும்
வகைக்குழக் காக்கியிதனிற்
...வாகான திப்பிலியின் மூலமொடு சுக்கதும்
பரவுதிப் பிலிசெவ்வியம்
...பகர்சித்ர மூலமிவை பலமொன்று கூட்டியே
பதமாய் வடித்தெடுத்து
...வாகாக வுட்கொண்டு மேலிலும் பூசவே
வருசகல வாயுகுன்மம்
...வன்மாக விட்டோடு மண்டலங் கொண்டிடின்
மருவுநற் கிரியையிதனில்
ஆகாத வண்டிவகை நிக்கியே பத்திய
மறிந்தேற்க வுண்ணநன்றா
...மவ்வண்ண மரியதமிழ் முனிவனுரை செய்தன
னறுமுகவ னருளினாலே 54

## 2-வாதகுன்மம்

சீருடைய நடைகுறையு மலம்வி டாது
தீக்கொள்ளுங் கடுக்குமிகத் தியக்க முண்டாம்
பாருடைய வுறுப்பனைத்தும் பங்கங் கொள்ளும்
பரிவுடனே யசனமிகத் தானுஞ் செல்லாப்
பேருடைய வுடல்கறுக்கும் பெலனு மீனம்
பேசொணா நாவநளுந் தலையு நோகும்
போருடைய வாதகுன்ம வகையீ தென்றே
புகன் றனர்மா முனிவாருட் புலமை யாலே

### சிகிச்சை-நாரத்தங்காய்ச்சூரணம்

மேலநற் கொடுவேலி வட்டத் திருப்பியுடன்
வீறான பெருமருந்து
மேன்மைபெறு மாடுதின் னாப்பாலை வேர்களும்
மிக்ககல் லிந்துப்புடன்
சீலமுடன் பொடிசெய்து †வச்சிரப் பாலினைத்
நிகழவே வார்த்தரைத்துச்
சேருநா ரத்தங்காய் வளையமாய்க் கீறியே
திணித்துறக் கட்டியதனில்
ஞாலமுற மூடிப் புதைத்துநா லாநா
ணன்குற வெடுத்தரைத்து
நன்றா யுலர்த்தியே பொடிசெய் தடைத்தபி
னயந்துவெரு கடிகொண்டிடக்
கோலமுட னெழுகின்ற வாதகுன் மந்தலை
குலைந்தோடு மிக்கிரியைதான்
கொண்டாடு மிப்புவியி லறிவோ ருரைத்தமுறை
கூறியது கண்டு கொள்ளே

†வச்சிரப்பால் - சதுரக்கள்ளிப்பால

## 3-பித்குன்மம்

மஞ்ச ணிறம்போன் முகமாகும் வாந்தி யுண்டாய் மனமறுக்கும்
நெஞ்சின் மிகவே கோழைகட்கு நெருப்பா யிருக்கு முடலோயும்
அஞ்சும் வெய்யில் தனைக்கண்டா லறவே தலையைச் சுழற் றுமி
செஞ்சொற் பித்தகுன்மமென்றுதெளிந்தோருரைத்ததிறமிதுவே



### சிகிச்சை-சிவதைச்சூரணம்

கருதரிய சுக்குடன் மிளகுதிப் பிலிகடுக்
காய்நெல்லி முளிவிளங்கங்
காக்கொட்ட மேலமுட லிலவங்க பட்டையுங்
காவிலில வங்கவிலையும்
மருவுகடு ரோகணி முத்தமதி விடயமும்
வளமாய்ச் சமன்கூட்டியே
மன்னுமிச் சூரணம் பொடிபண்ணி யொருகூறு
வருசிவதை வேர் தன்னையே
பெருகவே பாலினிற் சுத்திசெய் தேயதன்
பேசுபொடி மூன் றுகூறு
பேணிவைத் தேயரைத் திளவெநீர் சர்க்கரை
பேரான கற்கண்டுடன்
வெருகடியி னளவுகொள வயிறுவிடும் வயிறுகன
மேவிடும் பித்தகுன்மம்
விட்டோடு மேகதிரை வேலனருள் பெற்றவர்கள்
வினையென்ன விருநிலத்தே 58

## 4-சிலேற்பனகுன்மம்

வாய்நீ ருறு மிளைப்புண்டாம் வற்று முடலம் வளியுண்டாம்
தானே யிரைக்கும் பெலன்கெடுக்குந் தள்ளுமசனந்தலை தியக்கம்
ஊனே நெஞ்சு மிகப்புகையு முள்ளே நடுக்கு முடலுமிக
மானே சேற்பன குன்மமென மலையின் முனிவன் வகுத்தானே

### சித்திரமூலத்தைலம்

செய்யசித்ர மூலம்வெள் வேலினுறு பட்டையுஞ்
சேரவிவை யிகுபதுபலஞ்
சேர்ததே யிடித்தாம் பதக்குநற் றூணியிற்
நிகழவெட் டொன்ற தாக்கித்
துய்யவெள் ளெண்ணெயொரு நாழிதேங் காய்தனைத்
துருவிப்பி ழிந்திட்பால்
சொல்லுமெலு மிச்சையிற் றண்கனிச் சாறிவைக
டுன்னவொரு நாழிகூட்டி
நையவெள் ளுள்ளியும் வசம்பிவைகள் கூட்டியே

நன்குற வடித்ததயிலம்
நாடோறு முக்கழஞ் சளவாக வுண்டுமேல்
நண்ணியே பூசிவருகிற்
பையவே வருகின்ற சேற்பனக் குன்மங்கள்
பாறிவிடு மென் றுரைத்தான்
பரமனரு ளறுமுகவ னடிமலர்கள் மறவாது
பரவுதமி ழறிமுனிவனே 6

## 5-சன்னிகுன்மம்

தியக்க மெடுக்கு மறிவழியுஞ் சீரா யசனஞ் செல்லாது
மயக்க முடனேயிரைச் சலுண்டாம் வாய்நீர் சுழற்றும் வயிறழியும்
முயக்கு நெஞ்சு புகைந்திருமு மூச்சு மிகவும் விரைந்தெழும்பும்
பயிர்க்குஞ் சன்னிகுனமமென் றுபண்போர் சொல்லும்படியாமே

### சிங்காரச்சூரணம்

காய்ந்திடுஞ் சுக்குடன் மிளகுதிப் பிலியதுங்
கடுநெல்லி முளிதான் றியுங்
கருதரிய சீரகமு மோமங் குலக்காய்
கராம்போல மதிவிடயமும்
ஆய்ந்திடுந் நாய்க்கடுகு மிலவங்க மிலைக்கள்ளி
யதனிலுறு பட்டையதுவு
மானதோர் வேப்பினிலை யிந்துப்புச் சமனதா
யாகுமிப் பொடிதன்னையே
வாய்ந்திடும் வெருகடிப் பிரமாண மனுபான
வகையினிற் கொண்டுவரவே
வருசன்னி குன்மவகை மாறாத மூர்ச்சைவகை
மாறியே போகும்வண்ணம்
பாய்ந்திடுங் கங்கைசூழ் தென்கதிரை நகரிலுறை
பரமனறு முகவனுகள
பாதமல ரனுதினமு மறவாத குறியமுனி
பாரினி லுரைத்தானரோ 6



## 6-எரிகுன்மம்

வயிற்றையெரிக்குங்குடல்குமட்டும்வாய்நீர்சுழற்றுந்தலைவலிக்கும்
உயிர்ப்பை யழியக் கிறுகிறுக்கு மோங்கா ளிக்கும்புளித்தேக்கும்
வயிர்க்கால் தோறும் வேர்வைவரும் வயிறும்பொருமிக்கழிந்திரையும்
எயிற்றை யெரியு முடலிளைக்கு மெரியுங் குன்ம மிதுவாமே 63

### கிட்டச்சூரணம்

வள்மையுள வால்ப்பட்டை பத்துடன்..........................
வரிக்கடுக் காய்நல்லதாய்
மன்னுபல மைந்துட னிடித்திதைப் பொடிபண்ணி
மருவுகோ மூத்திரத்திற்
தளராம லேயூறப் போட்டிருப் புக்கிட்டந்
தன்பொடியு முரியதாகத்
தணியவே மூன்றுநா ளூறியோர் கெசபுடந்
தனிலிட்டுப் பொடிபண்ணியே
மிளகுசுக் குப்பொடி வகைக்குழக் காகவே
மேன்மையாய்ப் பொடிகள் பண்ணி
மேவுமிந் துப்புடன் காந்தம்வகை யோர்பலம்
விளங்கவொன் றாய்க்கூட்டியே
இளகவே மோருடன் சோறுண்டு காசினிடை
யித்தூ ளருந்திவரவே
யெரிகுன்ம மாறிவிடு மணிகங்கை சூழ்கதிரை
யெந்தைமுரு கேசனருளே 64

## 7-சத்திகுன்மம்

தீபனந் தியக்க மோடு சேர்சிறு வலியு முண்டாய்த்
தீபுர வாந்தி யோடு பெலன் கெடு மலம்வி டாது
ஆமமாய் நடையுங் குன்று மக்கினி மந்த மாகும்
கோபமாஞ் சத்தி குன்மக் குணங்களைக் கூறி னாரே 65

### வில்வாதிலேகியம்

தவமான வில்லவேர் கொடுவேலி சங்கவேர்
சாற்றிடு முவாய்ப்பட்டையும்
தக்கதோர் முருங்கைக் கிழங்குட னழிஞ்சிலுந்

தகமையா யிவைகள்பாதி
நவமான வில்வவேர் பாதியாம் வகையெலா
நன்றாக வேயிடித்து
நாடிய கஷாயமதை யெட்டிலொன் றாகவே
நலமுறக் காய்ச்சியிதனைத்

துவலையற நன்றாய் வடித்திதிற் கற்கவகை
சொல்லுவோம் வகையாகவே
சுக்கைந்து பலமிளகு திப்பிலியொவ் வோர்பலந்
துய்யவிந்துப்பி னுடனே
எவரெவரு மெச்சுவெந் தயமுமிரு சீரகமு
மிவையெலாம் வகைகாற்பல
மேத்திடுஞ் சூரணஞ் சாலதனி லேயிட்டு
விருநாழி நெய்யினுடனே

நேரான தேனினுட னாவிலுறு பாலுமே
நெடியநா ரத்தைதானு
நிலைபெற்ற வெலுமிச்சி னுறுகனியு மிஞ்சியு
நிரம்பவே வகைநாழியாய்ச்
சீரான பழவெல்ல மதுபலம் பத்தோடு
செப்புவெள் ளுள்ளிநாழி
சேரவே கூட்டியதை லேகியம் பண்ணியே
தினமுமுக் கழஞ்சுகொள்ளத்
தீராத வெரிகுன்மஞ் சிறியவலி குன்மமுஞ்
சேர்ந்தவெள் ளோங்காளமுஞ்
சேரும்விஷ பாகமொடு பாண்டுகா மாலையுந்
தீராக்கி ராணிவகையும்
பாரோர் மதிக்கவிவ் வகையெலாந் தீர்ந்திடும்
பரவுமணி கங்கைசூழும்
பகர் கதிரை மயிலுறு மடியர் துயர் தீர்த்திடும்
பன்னிரு கரத்தனருணே



## 8-வலிகுன்மம்

ாய முலரும் வயிறூதுங் கருகு மேனி கருத்தழியும்
ாய வயிறு மிகவிரைந்து பகுத்த விலாவு முளை போலாம்
ாய நடையு மிகக்குறையுஞ் சோறு மிகவுஞ் செல்லாது
ாய வலியின் குன்மமென வல்லோர் சொன்ன வாறிதுவே 68

### வெள்ளுள்ளிலேகியம்

ாயுருவி நீர்முள்ளி யிவையெரித் திடுசாம்பல்
நவில்வகைக் கிருநாழியாய்
த்துபதி னாறுபடி நீரிற்க ரைத்ததனை
நாளூற விட்டெடுத்தே
ூயவடி யிட்டபின் னாழியாய்க் காய்ச்சியே
யானவுலர் மண்குறுணியி
டைவாக நீர்தூணி விட்டடுப் பேற்றியே
யதுநாழி யாகவற்றிக்
ாயநன் றாய்வைத்து வெள்ளுள்ளி கொடுவேலி
கருதுவில் வங்களுடனே
ாணவரு வேர்களிவை யாகவகை யிற்பலங்
கருணையுட னளவாகவே
ாயநன் றாயிடித் துத்தூணி நீரிலிடு
துலங்கவெரி யெட்டிலொன்றாய்ச்
வறவே காய்ச்சியிவை யெல்லாமொன் றாகவே
சொல்லுமின கிந்துப்புடன

ரகந் திப்பிலி சேரு மோமமும்
ாரவே வகைபலந் தமைப்பொ டித்திவை
சரநல் லிலேகியந் திரளக் காய்ச்சியே
ூரொரு மண்டல மகலுங் குன்மமே 70

### பொதுமருந்துகள்

### கள்ளிப்பாலுண்டை

ள்ளி பெருங்காய மோரொன்று முப்பலமும்
ள்ளிப்பா லாழாக்குக் காணவே-வெள்ளி
ிரசமுடன் றேங்காயி லிட்டடைத்துச் சுட்டுண்
ாரதமுடன் குன்மம்போம் பார் 71

## வேளைச்சாம்பல்

வேகமாம் வேளை தன்னில் விளம்பிய சமூலந்தன்னைப்
பாகமாஞ் சாம்பலாக்கிப் பசுநெய்யிற் கலந்தருந்தப்
போகுமே யெரிக்குங் குன்மம் புண்பட வலிக்குங் குன்மம்
ஏகமா மலட்டுக் குன்ம மென்றுமா முனிவர் சொன்னார்

## குமரிப்பற்பம்

பெருங்காய மெண்கழஞ்சு கெந்தகமெண் கழஞ்சு
பெலத்திடுதிப் பிலியாறு வேர்க்கொம்பு மாறு
தருங்கார மிளகாறு மூன் றுகழஞ் சேலந்
தகுமிதா மெண்கழஞ்சு மூன் றுகழஞ் சுலு
அருங்கான மோதமஞ்சு நற்சீர மாறு
வருமுசிக் காந்தம்பத் தரைபொடியெண் கழஞ்சு
இருங்காய நிலவினுப்பு மூன்று கழஞ்சுடனே
யேற்றமா மஞ்சளுமுக் கழஞ்சுநிறை கூட்டே

கூட்டியநற் சரக்கெல்லா மிடித்து மாவாய்க்
கூறுமிஞ்சி தருஞ்சாற்றி லரைத்துப் பின்னர்
நாட்யசீரி ரசமந்த மருந்திற் சேர்த்து
நவில்கையான் றனிலரைத்து மூன்றா நாளிற்
காட்டியதோர் குமரிமடல் தன்னை வாட்டிக்
கசக்கியெடுந் நீவிட்டுக் கருத்தா யாட்டி
வாட்டமுற நிழலுலர்த்திப் பொடித்துத் தேனில்
மண்டலமொன் றருந்தியிடும் வகையைக் கேளே

கொண்டிடுமுன் னேர்வான மரைத்துக் கூட்டிக்
கொடுத்துமல சுத்தி நன்றா யான பின்னர்
உண்டிடுமிப் பற்பத்தை வெருகிற் கொண்டே
யுகந்தபதி னைத்தாநா ணீரின் மூழ்கி
மிணடிடும்பத் தியம்பசுப்பான் முருங்கைப் பிஞ்சு
மிளகுநீர் கூட்டிவரிற் றீர்வி யாதி
கண்டிடுநோ குன்மமெட்டுக் கிராணி வாதங்
கடுஞ்சூலை குடல்வாதங் கலைந்து போமே



## குமரிப்பற்பம்-2

சூதந் நாலு சிலையிரண்டு தூய கெந்தி யெட்டாகும்
ஓதுங் காந்த மதற்கிரட்டி †யுருக்கின் பொடியு மதற்கிரட்டி
சீதக் குமரி மடற்சாற்றிற் சேர்ததே யாறு நாளரைத்து
மீது புதிய கலசத்தில் மிகவு மெரித்துப் பெடியாக்கே 74

பொடியாங் குமரிப் பற்பமதைப் புதிய தேனிற்குழைத்திருந்திற்
கடியார் பிலிகை வலிகுன்மங் கழிச்சல் கிராணி யுடல்பொருமல்
துடியார் பாவை யெரிகுன்மந் தொடர்ந்த பாண்டு காமாலை
படியா ரிஞ்சிச் சாற்றருந்திற் பறந்தே போகுங் கண்டாயே 77

(வேறுசிலகுன்மங்களும் கூறப்பட்டிருக்கின்றன அவற்றை இதன்கீழ்த் தருகின்றோம்)

## 1-கொலைக்குன்மம்

மேல்வயி றதனில் வந்து மிடைபட வலித்தெ ரித்துச்
சாலவே வாய்நீ ரூறித் தங்கிடா தேப்ப முண்டாம்
சீலமாங் குளிரே யுண்டாய்ச் சேர்வுகள் வெதுப்பு மாகில்
கோலமாங்கி குழலி னாளே கொலைக்குன்ம வாயு வாமே 78

## 2-மூலகுன்மம்

கீழ்வயிறு லித்துநொந்தே யடசிக் குத்திக்
கெஞ்சிடவே குருதிவிழும் வயிறு மூதும்
தாழ்வறவே மூலநொந்து வெளியிற் றள்ளுந்
தானருந்து மசனமெலா மறுத்தாள் வற்றி
ஊழ்பெறவே கிறுகிறுத்து வெளுக்கு மேனி
யுதரநொந்து வலியிரவி லதிக மாகும்
மூள்பெறுமிக் குணமெல்லா மிருக்கு மாயின்
மூலசிறு குன்மமென மொழிந்தா ரன்றே 79

†யுறுகைச் சோலமதற்கிரட்டி - என்றும் பாடம்

### 3-ஈரல்வாதகுன்மம்

முதுகுளைந்து குத்திமெத்த விறைத்து வேர்த்து
முட்டதா யிருபுறத்தில் விலாவைக் கிட்டிக்
குதுகுதுத்துக் குடலதனை மேலே வாங்கிக்
கொண்டீரற் றளிரதனிற் குத்துண் டாகும்
கதுமெனவே புரண்டுளைந்து கடின மாகிக்
களைகளையா யுவாதிமிஞ்சிச் சோகங் காட்டும்
இதுவீரல் வாதகுன்ம மென்றே வேத
மியம்பியதிக் குண்மதனை யியல்பிற் காணே

கண்டிடுந் திரண்டு குத்திக் களைத்துடல் பொருமி முட்டாம்
மிண்டியே யீரல் தன்னில் விரைவினில் விறைப்புண் டாகும்
கொண்டிடு மன்ன மீறிக் குமட்டிடுங் குமிறி யோடும்
அண்டிடு மீரல் வாத குனமமென் றறைரந்தா ரன்றே

### 4-மரணகுன்மம்

வலித்திடும் புரட்டிக் குத்தி வயிறது பொருமி முட்டாய்க்
கலித்திடப் புரண்டு விம்மிக் கனத்துட லழுது சீறிச்
சலித்திட வோங்கா ளித்துச் சமித்திடா தெரிக்கு நெஞ்சு
நலித்திடு மரண குன்மஞ் செய்குண நாட்டுங் காலே

### 5-அடைப்புக்குன்மம்

அடைத்திடு நெஞ்சிற் குத்தி யவலமாய்ப் புரட்டி யேறிப்
படைத்திடுங் குடலை யீரற் குலையினிற் பதற வேறிப்
புடைத்திடும் பொருமி முட்டாய்ப் பொறுக்கரி தாகு மிண்டி
இடைத்திடு மடைப்புக் குன்மஞ் செய்குண மியம்புங் காலே

### 6-பிலிகைகுன்மம்

மலத்தை யிறுக்கி மந்திக்கும் வலுவா யுதரந் தனிற்புரளும்
பெலத்தே யதைக்கு மீரலொடும்பெருகக்கனத்துப் புரண்டேறும்
உலர்த்து மசனங்குறைந்துவருமோங்காளித்துப் புளித்தேப்பாம்
குலத்திற் பெரிய பிலிகைகுன்மக குணத்தைப் பேசுங்குறியாமே



### வாய்வுரோகம்

அருளொளி வடிவாம் வெள்ளி யசலத்தி லமர்ந்த மூர்த்தி
திருவடி மறவாச் சிந்தைத் தென்றமிழ் முனிவ னந்நாள்
உரைசெயு மாயுள் வேதத் தோதிய வாய்வு ரோகம்
பெருகிய குணமு மேற்ற சிகிச்சையும் பேச லுற்றாம் 1

### வாயுக்களின் பெயர்த்தொகுப்பு

உற்றிடும் பிரமை வாயு வுளைந்திடுங் கிரந்தி வாயு
செற்றிடா னந்த வாயு செறிந்துடல் வாங்கும் வாயு
வற்றிடும் பித்த வாயு வலித்துட லடங்கும் வாயு
பற்றிடுஞ் சேற்ப வாயு பகர்வாத வாயு வொன்றே 2

குண்டல வாயு வொன்று குடல்வாயு குமிறும் வாயு
மண்டல சூல வாயு மயக்கிடு மெகுத்து வாயு
கொண்டெழுஞ் சீத வாயு கொலைசெயும் பக்க வாயு
மிணடுசெய் துடலிற் குத்தி விடதுயிர் பறிக்கும் வாயு 3

இருத்திடு மயக்கும் வாயு வேறியே யிறங்கும் வாயு
உருத்திடுங் கபால வாயு வுட்டண மெழுப்பும் வாயு
பெருத்திடுஞ் சூத வாயு பேசிடு மந்த வாயு
கருத்தழித் திடுமா வாயு கடைக்குடல் சொருகும் வாயு 4

கருவழித் திடுமோர் வாயு கட்டியாய்ப் புரட்டும் வாயு
உருவழித் திடுமோர் வாயு வுள்ளறி வெழுப்பும் வாயு
பருவெழுப் பிடுமோர் வாயு பரிந்துடல் சொறியும் வாயு
அருவருத் திடுமோர் வாயு வந்தரத் தெழுமோர் வாயு 5

எரிந்திடும் வாயு பின்னி யிடைகலை யியங்கும் வாயு
பரிந்திடும் பூத வாயு பயம்வரச் சுழற்றும் வாயு
பிரிந்திடந் தரஞ்சேர் வாயு பெரும்பாட்டுச் சூத வாயு
சரிந்திடு மகோர வாயு சதித்திடுஞ் சன்னி வாயு 6

உட்டண கிரந்தி வாயு வுறும்பிற வீச்சு வாயு
நட்டவிந் திரிய வாயு நலக்கிடுங் குன்ம வாயு
கெட்டவே தாள வாயு கிளரண்டஞ் சேரும் வாயு
திட்டமார் வீணா தண்டைச் சேர்ந்திடுங் குய்ய வாயு 7

துன்னிய திமிரின் வாயு துயில்செயாப் பயித்திய வாயு
இன்னுயிர் வாங்கும் வாயு வெழுத்துற மயக்கும் வாயு
தன்னிகர்ச் சத்தி வாயு சமித்துநித் திரைசெய் வாயு
மின்னிகர் வாயு பத்தில் விரிந்திடு மறுப தாமே

### வாயுசெய்யுங் கோளாறு

குத்திடுஞ் சிலது சீறிக் குடலிடைக் குமிறி யோடிக்
கத்திடுஞ் சிலது மீறிக் காலினி லுளைந்து வாங்கும்
ஒத்திடுஞ் சிலது மீண்டி யுருத்துட லுயிரை வாங்கு
செற்றிடுஞ் சிலது நாளுந் தீன்செரித் திடாமற் செய்யும்

அடுக்கிடுஞ் சிலது மீறி யறிவழித் திடுநா வீழ்த்தி
முடக்கிடுஞ் சிலது சீறி முறித்திடுஞ் சிலது மூசித்
தடுத்திடுஞ் சிலது சன்னி சாய்ந்திடுஞ் சிலது மீதி
இடித்திடுஞ் சிலது விக்கி யேப்பமுஞ் செய்யு மன்றே

வலித்திடுஞ் சிலது வாங்கி வசமற விழுத்தி மூசி
நலித்திடுஞ் சிலது குத்தி நடுக்கிடுஞ் சிலது பேசிச்
சலித்திடுஞ் சிலது தானத் துளைந்திடுஞ் சதியாய் வீங்கும்
நெரித்திடுஞ் சரீரந் தன்னை நிறைபசி யெமுப்பு மன்றே

இடைகலை சுழுனை மூன்று மிந்திரி யங்க ளைந்தும்
நடைதரு பூத மைந்து நாட்டுமுன் பொறிக ளைந்தும்
தடைதரு வாயு பத்துஞ் சார்ந்திடு நாடி பத்தும்
அடைதரு மாறா தாரா மவத்தையு மைந்து சாரும்

மலசலம் விந்து நாத மாயையுட் கருவி வாக்குச்
சலமுறு தூல சூக்கஞ் சார்ந்திடு காயக் கூட்டில்
நலமுறு தத்து வங்க ணண்ணிநின் றிடுவ தேபோற்
பலமுறு வியாதிக் கெல்லாம் பதியுயர் வாயு வாமே

வாயுவே சீவா தார மாகிய வலிமை தன்னால்
மீயுயர் வியாதிக் கெல்லாம் விதித்திடு மாசு மாகும்
ஆயுயர் வாயு வின்றி யருந்திடா வினைக டாமும்
வாயுமா காயக் கூட்டிற் பாவையாட் டவனே யாமால்



### பிரமைவாயுவின்குணம்

இருந்திடும் பேச்சு மின்றி யிடருறு மறிவு சேடாய்
வருந்திடும் பயம்வந் தேங்கி மயங்கியே சலிப்புண் டாகும்
பொருந்திடுந் தனியே நாளும் பொருமியே யழுது சோரும்
அருந்திடுங் கொடுத்தா லன்ன மவலமார் பிரமை வாயு 15

### கிரந்தி வாயு

உருத்திடுங் கிரந்தி தோன்றி யுளைத்திடு முறக்கம் வாரா
பெருத்திடுங் திமிருண் டாகிப் பேதிக்கு முயர வேறி
இருத்திடு மயக்கும் வெப்பா யிரவினிற கனவு காட்டும்
வருத்திடுங் கிரந்தி வாயுக் குணமென வகுக்கும் வேதம் 16

### (மற்றொருபிரதியின்படி)

பெருத்திடுந் தேம லாகிப் பேதிக்கச் சொறிந்த முற்றி
உருத்திடு முளைந்து குத்தி யுறங்கிடா தினவுண் டாகும்
இருத்திடு மிரும லுண்டா யிரவினிற் கடினஞ் செய்யும்
வருத்திடும் வயிற்றின் மார்பில் வலித்திடுங் கிரந்தி வாய்வே 17

### உட்டணகிரந்திவாயு

காலினிற் றமிர்த்து ளைந்து கடுத்துமே லெரிவுண் டாகித்
தோலினி லிரத்தமின்றித் துணிந்துடல் திரங்கி மேனி
சூலினிற் கருகி வாடித் துயர்செயு முயர வேறும்
மேலினுட் டணகி ரந்தி வாயுவென் றுரைக்கும் வேதம் 18

### ஆனந்தவாயு

மோனமாய்ப் பேச்சு மின்றி மோகித்து முறுவல் செய்தே
ஈனமா †யியற்கை பேணா திருந்திடும் பசாசு போல
ஊனமில் கஞ்சி தண்ணீர் கொடுத்திடி னுவந்து கொள்ளும்
தானமா னந்த வாயுச் செய்குணஞ் சாற்றுங் காலே 19

†ஈனமா மில்லம் பேணா —என்றும

**பித்தவாயு**

பித்தமுங் கொதித்து வாய்நீர்பெருத்திடு மயக்க முண்டாம்
மிடுக்கிடுங் கோப மாகி வேகித்துப் பலவும் பேசும்
திடுக்கிடும் பயமில் லாமற் றிரிந்திடும் விசர்போ லோடும்
அடுத்திடும் பித்த வாயு வதிகரித் தவலஞ் செய்யும் 20

**(பாடபேதம்)**

நடுக்கிடுங் கிறுகி றுக் நாளொரு பேதங் காட்டும்
மிடுக்கிடு முயர வேறி வேகித்துச் சுழற்றிச் சுற்றும்
திடுக்கிடப் பயமுண் டாகித் திரிந்திடும் விசர்போற் பேசும்
அடுத்திடும் பித்த வாயு வதிகரித் திடவுஞ் செய்யும் 21

சுத்தவக் கினியிற் பித்தந் தோன்றியே சிரத்தி லேறி
நித்தமு மொருவர் செய்த பிழையினை நினைத்துப் பேசும்
மொத்தவே யறிவு போல விளம்பிடும் லிகர்கொண் டோடும்
சித்தமார் பித்த வாயு செய்குணஞ் செப்பும் வேதம் 22

**அகோரவாயு**

தாகித்துத் தண்ணீர் கேட்குந் தழலென வெரித்து குத்தும்
வேகித்து வுயர வேறி மயக்கிடும் வெறிபோற் பேசும்
சோகித்துக் களையுண் டாகித் துயர்செயு முணவு கொள்ளா
மோகிக்கு மகோர வாயு செய்குண மொழியுங் காலே 23

மூலக்கனலி லெழுந்தபித்த முதிர்ந்தே கோபக் கனவாகிக்
காலக்கனல்போற்கதித்தெழுந்துகதித்தேகோப்புக்கொதித்துண்டாய்க்
சூலக் கனல்போற் கடுங்கோபத் துயராற் றுயர மிகவுண்டாம்
ஆலத் தகோரப் பெருவாயு செய்யுங் குணங்க ளறிவீரே 24

**அந்தரவாயு**

கண்ணினைச் சுழித்து வாங்கிக் காதடைத் திருளாய் மூடி
எண்ணமாய் மயக்கி யேறி யிடர்தருங் களைத்து வேர்க்குந்
தண்ணெனச் சரீர முற்றுந் தான்விறைத் திடுந்தீர்ந் தேகும்
திண்ணமந் தரத்தின் வாயுச் செய்குணந் தேர்ந்து கொள்ளே 25



பழுவேயுடல் மிகவேதிமிர் பாரூனொடு பசியும்
பாதகங்கழல் தோல்பஞ்செழு மார்மஞ்சன முதலாம்
சழியாய்விடு தொடர்வாதமும் வழிநாள்பழி யொழிநோய்
சயனம்பொரு விழிமஞ்சளி னொளிதந்தென லாகும்
பழுவாயுவி னுடனோடிய வுளைவேமிக வென்பு
படராழியும் விடுமாறெனத் தடுமாறுதல் மிகுமாம்
பழனோய்மல முடனூறுதல் குடலந்தர வளையம்
படர்வாயுவி னடைவாகடர் முதலோதிய வடைவே 26

**அண்டவாயு**

வயிற்றினி லடசிக் குத்தி வலித்திரு விரையுள் வாங்கி
உயிர்ப்பறப் பொருமி வீங்கி யுண்முட்டா யிழுத்துப் பூட்டி
அயிர்ப்புற விடுப்ப நாரி கடுத்திடு †நூலிற் குத்தும்
செயிர்ப்புறு மண்ட வாயு சிரத்தினு மயக்கி யேறும் 27

ஏறியே வாதந் தோன்றி யிடர்செய்து வருத்தி நிற்கும்
மீறியே திமிர்த்துக் குத்தி விறைத்திடு மயக்கி வேர்க்கும்
வீறுயர் மருந்தை மீறி விடுஞ்சல மலம றிக்கும்
கூறிய வண்ட வாயு கொடுமையுஞ் செய்யு மன்றே 28

**பக்கவாயு**

ஒருபுறம் விரையை வாங்கி யுறவலித் நடசிக் குத்தி
மருவுறச் சலம லத்தை மறித்திழுத் தடசி முட்டாய்
வெருவுற மயக்கி யேறி விறைத்திடும் வேர்வை யுண்டாம்
உருவுறும் பக்க வாயு வுயிரையும் பறிக்கு மன்றே 29

அன்றியும் பக்க வாயு வதிகமாய் வாயு வேறி
ஒன்றிய மருந்தை மீறி யுருத்துவேர்த் தடசிக் குத்தி
வென்றிட வலித்து வாங்கி விறைத்துடன் மயக்கி நிற்கிற்
கொன்றிடுஞ் சிலது மாறுங் கொலைசெயும் பக்க வாயு 30

†விலாவிற்குத்தும் என்றும்.

**பக்கவாயுவில் அசாத்தியக் குறி**

கொன்றிடுங் குணமே யாகிற் குளிர்ந்திடும் விறைக்கும் வேர்க்கும்
நின்றிடுஞ் சிரத்தி லேறி மயககிநீர்ச் சீலை போல
வென்றிடு மருந்தை யெல்லாம் விழிதனைச் சொருகி மேலே
சென்றிடிற் பக்க வாயு தீழமயே செய்யு மன்றே 31

**பூதவாயு**

வற்றியே சரீர நாளும் வாடியே மயக்கி யேறும்
சொற்றிடும் வெறிபோற் பேசித் துன்பமாய்ப் பசாசு போலப்
பற்றியே நடுக்கி யேறிப் பசியின்றி யிருந்து சோம்பும்
உற்றிடும் பூத வாயுச் செய்குண முரைக்குங் காலே 32

கிரத்தினி லுயர வேறித் திமிர்த்திடு மயக்கி வேர்க்கும்
உயர்த்திடுங் கடினஞ் செய்யு முவாதியாய் நடுக்கி வீழ்த்தும்
இருத்திடும் பேச்சு மின்றி யிடருறுஞ் சிலநா ளின்றே
வருத்திடும் பூத வாயுச் செய்குணம் வகுக்குங் காலே 33

**வேதானவாயு**

சீதமா யுளைந்து குத்தித் திமிர்த்திடுஞ் சிரத்தி லேறிப்
பேதமாய்த் தலைந டுக்கிப் பேயதின் குணமுங் காட்டிச்
சேதமா யொருபா கத்திற் றிமிர்விறைப் பதக மாகும்
பூதவே தாள வாயுக் குணமெனப் புகலும் வேதம் 34

உருத்திடுந் திமிர்த்தே யேறி யுரத்திடு மயக்கி வேர்க்கும்
சிரத்தினிற் கனத்து மிண்டித் திடுக்கிடு நடுக்க முண்டாம்
வருத்திடும் பிடரி வாங்கும் வலித்திடுங் கடுக்கு நாரி
பெருத்திடுந் தலைநோக்குத்துப் பெலக்கும்வே தாள வாயு 35

**(வேறுபிரதியின்படி)**

வாதம்வளர் வேதாளவவ் வகைவன் றுறுவசனம்
மருஞ்சடர் குளிர்மத்தமும் வலியும்பிர மையுமாம்
பேதம்பல வசனந்தனில் மெய்யும்பல பொய்யும்
விழியும்பசு நிறமஞ்சளும் மெலிவார்விழி துஞ்சார்
சூதந்தர பூகங்கள் சுணங்கன்கன லெழுநோய்



சொல்லும்ப மலரும்விழி சூழலுந்தலை பிடர்நோம்
மீதுஞ்சட் ரெதிரேவரு மெய்வாய்வழி பெருநீர்
விடமந்தர வளையஞ்செறி படர்வாயுவி னடைவே 36

படர்வாயுவி னடைவேசடர் வலியால்வரு துயரிற்
பாதங்கர மொன்றொன் றினைப் பற்றும்படி தோற்றும்
விடமேவிய துயர்போல்விழி விண்ணேகிய வடிவாம்
வெண்முத்தை யிறுக்குஞ்சிறு கன்னத்தை வளைக்கும்
கொடிதேசல மலமேவிட குறிநீர்விடு கசிவிற்
குன்மந்தனி வன்மங்குடி கொண்டேபிற வஞ்சம்
கடிதாகிய படிதீரிது காயந்தனி னினறே
காலன்விடு சாதங்கயி றென்னுங்கன சோபம்
வடவாமுக மெனவேவலி யறிவேகெட வந்தால்
வாதஞ்செறி மூலந்தனில் வகையென் றனர் முனிவோர் 37

**குண்டலவாயு**

கண்டிக்கு முதரந் தன்னிற் கசித்திடுங் கூப்பிட் டோடும்
விண்டிச்சை விரும்பித் தின்னின் மேற்படு முருண்டு கற்போற்
தெண்டித்துச் சிதறிப் பின்னுஞ் சிதைந்துடல் பாதந் டங்கும்
கொண்டிப்போ ருடலிற் குத்துங் குண்டல வாயு வாமே 38

**மூலவாயு**

சடர்லாதமுள் ளுடல்மே லெரியுங்குட லெரியுந்
தலைநோவொடு வருமாசனந் தினவேமிக வுளதாம்
அடைவேசல மலமேவிட வரிதாயிடும் விழியு
மரிநீரொடு தலையோடெரி தினநாசிகள் தினவாம்
உடல்சோருத லெதிரேறுத லுரமேவிடு முதுகும்
முளைவோடலர் குதிசீறுதல் விரல்சேர்வலி யுளதாம்
படருறுத லுடருதல் துயரேறுதல் மீள்தல்
பாதங்குளிர் மேல்வெம்புதல் பலபேதமு முளதே 39

வற்றி மலந்தீயு மந்திக்கு மேல்வெளுக்கும்
சற்று மலைச்சல் தணியா து-முற்றுமிது
மூலமாம் வாயுவென முன்னோ ருரைத்தபடி
சீலமாய்க் காண்பார் தெளிந்து 40

### குடல்வாயு

குடலில் வலிக்குங் காலுளையுங் குமிறு மிகவு மந்திக்கும்
உடலி லடங்கி யோடிநிற்கு மொருகா லன்றிப் புரண்டுநிற்கும்
கடலிற் றாங்க மதுபோலக் கலக்கு மூடே வாதைசெய்யும்
திடலிற் பெருத்த வரால்போலச் சிறுகுங் குடலில் வாயுவிதே 41

### அத்திரவாயு

பத்தியங் கொண்ட போது பலபட மலமுந் தள்ளி
நித்தியம் புளித்தேக் கிட்டு நின்றிடு கருவ லாகச்
சத்தியுந் தழன்று காட்டுந் தறுகிடாத் தவனம் பேசும்
இத்தனை குணமுங் கண்டா லத்திர வாயு வென்னே 42

### ஆற்றாமைவாயு

மண்டியே யுதரந் தன்னின் மறைக்குமூ லாக்கி னீயைக்
கொண்டதோ ராகா ரத்தைக் குழப்பியற் றாமை யாக்கும்
உண்டிடிற் புளித்தெ ரித்தே யுடனுற மலமுந் தள்ளும்
விண்டவாற் றாமை வாயு வென்றுதான் விளம்ப லாமே 43

### மந்தாக்கினி வாயு

உண்டியிற் பொரும லாலுமூண்டனல் விளைத்த லாலும்
கொண்டுதான் கஞ்சி தண்ணீர் கொதிப்புடன் வெதுப்பி னாலும்
மண்டியே வெளுத்துக் காய மயங்கிட வுலர்த்த லாலும்
அண்டர்முன் பேசும் வேத மக்கினி மந்த மென்னும் 44

நீண்டு பசிமிகுத்து நின்று வயிறளவி
வேணடியது தின்ன விரும்புமே –மீண்டுமது
†சந்தோஷ மாகிமிகத் தானே யுவாந்திக்கும்
மந்தாக் கினியென்னும் வாயு 45

†சந்தோஷமாகி – தோஷத்தோடு கூடியதாகி என்க.



வந்து மிகுந்து பசியுமன்றி வயிறும் பொருமி மந்திக்கும்
சிந்தை தனிலே நினைந்தவெலாந் தேடுங் கொள்ள வொட்டாது
இந்தக் குணமே யிருந்ததெனி லியலு மக்கினி மந்தமென
அந்தப்படியே முனிவ ரெலா மருளிச் செய்த படியாமே 46

### உரத்தவாயு

கொண்டிடு மசன நின்று குமட்டியே பொருமிக் கொள்ளும்
மண்டியே நெஞ்செ ரித்து வாயூறி வாந்தி செய்யும்
பண்டையின் மலமுந் தீயும் பத்தியங் கோபித் தோங்கும்
விண்டுதா னுரத்த வாயு வி:.தென விளம்பி னாரே 47

### கெண்டைவாயு

சுரத்தினா லுடம்பு வற்றித் துடியென விடிக்கு நெஞ்சு
உரத்திட வீரல் மீதே யொருபுறங் கனப்ப தாகும்
வருத்திடும் வலியு முண்டா மலமுலர்ந் துருண்டு வீழும்
குருத்ருவ மறிந்து கெண்டை வாயுவா மென்று கூறே 48

### வாயுக்களின் அசாத்திய சாத்தியக்குறிகள்

கீழே நின்ற வாயுக்கள் கிளர்ந்து மேலே நோக்கிடுகில்
நாளே விரைந்து மீளாது நன்றாய்க் கீழே நின்றிடுகில்
தாளே வீங்கா மிகுதாகங் கொள்ளா திருக்கு மாமென்னில்
மீள்வா ரிதுவே திண்ணமென விரைந்து மருந்து செயலாமே

## சிகிச்சை

### குண்டலவாயு முதலியவற்றிற்கு கருங்கோழிப் பற்பம்

மூன்று வருடந் தான்சென்று முதிர்ந்த கோழி தனைப்பிடித்துக்
கீன்று குடல்தோ லிறகுமுதற் காலு நீக்கிக் கற்கங்கேள்
தோன்று முப்பு மிளகுள்ளி சுக்குச் சித்ர மூலமுடன்
ஆன்ற வீசூர மூலிவே ரளவாய் வகைக்குப் பிடியொன்றே 50

ஒன்றே சயிந்தம் பாக்களவா யுற்ற கடுக்கா யோரைந்து
நன்றா யரைத்துச் சரக்கெல்லா நவிலுங்கோழி தனிற்பொதிந்தே
அன்றே யுருவி யுவாய்நொச்சி யரிய வேலிப் பருத்தியுடன்
பொன்றா மாறு தமைக்கழுவிப் பொருந்தக் கீழு மேலுமிடே 51

இட்டுக் கோழி தனைநடுவே யெட்டு நாழி நீரூற்றி
அட்டு நீரு முரிநிற்க வதன்பி னெடுத்துக் கோழிதனிற்
சட்ட வெலும்ப தனைநீக்கிச் சரக்கோ டிறைச்சி தனையரைத்து
மட்டாய் வெருகி னடிகொள்ள மாறுங் குண்ட லவ்வாய்வே 52

**துடிப்புவாய்விற்கு**

**சிவகாமசுந்தரி தயிலம்**

சூதமுங் காந்தந் தானுஞ் சொற்படி கழஞ்சு நெல்லி
போதவே யொருசி றங்கை புகலகடுக் காயு நாலைந்
தேகமி லிந்து தானு மிருகழஞ் சிணங்குந் தான்றி
பாதவ மீதிற் காய்கள் பத்தொரு சிறங்கை சுக்கே 53

சிறங்கையோர் †பறவை மொட்டுத் திகழ்பெருங் காய மோமம்
பிறங்கிய கழஞ் சிரண்டு கடுகொரு சிறங்கை யுள்ளி
அறங்கிள ரொருசி றங்கை யானவெண் காரஞ் சற்று
நிறங்கிளர் மிளகு சாதிக் காயுநீ பத்துக் கொள்ளே 54

கொள்வது வேப்பம் வேர்மா விலங்கைவேர் குநற்தொட் டீவேர்
கள்ளவிழ புங்கம் வேர்வெண் முருங்கைவேர் கதித்த நத்தைத்
துள்ளுறு சூரி தூது வளையின் வேர் பொன்னாங் காணி
உள்ளவேர் கோவை வேருந் தண்டுநீ யொக்கக் கூட்டே 55

கூட்டுபேய்க் கொம்ம டீயிற் குறித்திடு மிலையு நொச்சி
ஈட்டிய சிவனார் நிம்ப மவுரிவே ரிருநி லத்தில்
நீட்டிய வாகை யெல்லா மெலுமிச்சம் பழம்பத் தொன்பான்
காட்டுநல் லெண்ணெய் கூட்டிக் காயவைத் தெரித்தி றக்கே 56

இறக்கியே வடித்து நாளு மினிதுட னுள்ளுந் நின்று
சிறக்கவே மேலும் பூசிக் காதுளுஞ் செறியத் தேய்த்தால்
துறக்கிடு துடிப்பு வாயு சுவாமிதன் னருளி னாலே
பறக்குமென் றருந்த வத்தோர் பகர்ந்தனர் பாரி னுக்கே 57

†பறவை மொட்டு - செண்பகமொட்டு



**குடல்வாயு பக்கவாயு முதலியவற்றிற்கு**

**காயம்**

சாரணை கான்றை நாரி தகுமிள குள்ளி சுக்குத்
தேறுதிப் பிலியிந் துப்புச் சிறுகடுக் காய்க ருஞ்சீர்
மாறிடு மிங்கு சீனக் காரமு மல்லி பாளம்
சாறிடு கடுகு ரோணி சவர்பொரி காரந் தேடே 58

தேடியே சமன்க ழஞ்சு சேரவே யரைத்துக் காய்ச்சிக்
கோடவே குடிக்கிற் காயங் குலைத்திடும் பக்க வாயு
ஓடிடும் வயிற்றி னுள்ளே யுருண்டிடு கெருநெ ருப்பு
வாடிடும் வயிற்றிற் குத்து மாறுமென் றியம்பி னாரே 59

**காயம்-2**

மாவிலங்கை கான்றைகாற் றோட்டி நொச்சி
மருவுமுருக் கெலுமிச்சை வெட்பா வட்டை
காவினிம்பங் கொன்றையமுக் கிறாமு ருங்கை
கழற்சிசா ரணைகொற்றா னிலத்தி வாகை
தாவியிவை துளிரிலையுந் தேங்காய்ப் பூவுஞ்
சமன் கொண்டே யெட்டொன்றா யவித்தி றுத்து
மேவியசா ரணைதூது கீழ்காய் நெல்லி
மிகுமுல்லை செவ்வகத்தி முருங்கை வேரே 60

வேரிவையோ ரளவுபெருங் காயஞ் சுக்கு
மிளகுலுவாக் கடுகுமஞ்சள் வெண்கா யுள்ளி
காரியசீ ரகமுடனே திப்பில் வாளங்
கழற்சிதரு பருப்புடனோ ரளவாய்க் கூட்டி
ஊறியமுற் கஷாயத்தி லரைத்துக் காய்ச்சி
யுடன்பருகச் சிற்றேரண் டெண்ணெய் கற்றுக்
கூறியதோர் குடல்வாதம் பக்க வாயு
கொடியவயிற் றடசல்வலி குன்மம் போமே 61

**காயம்-3**

பக்க வாயு நெருநெருப்புப் பகரும் வயிற்றிற் குத்துக்கு
மிக்க காயங் கான்றை வட்டு மீறுஞ் சாரணை நன்னாரி
ஒக்க வுள்ளி திரிகடுகு வுவந்த கடுக்காய் பெருங்காயம்
தக்க சீனம் பொரிகாரஞ் சவரின் காரங் கடுகுருணி 62

உற்ற கடுகு மிவையனைத்து முவந்து கழஞ்சொன் றரைகூட்டி
மற்றுஞ் சுத்தி பெறும்வாளம் வகுத்துக் கழஞ்சு தானாக
வைத்தே யரைத்துக் காயமதாய்க் காய்ச்சி யருந்த வருத்துபிணி
கற்றைச் சடையோ னருள்கதிரை வேல னருளாற் கழிந்திடுமே 63

### பற்பம்

கொடிக்கழற்சி தனிற்பருப்பு நெல்லி கோட்டங்
கூடுலுவா வுடைவசம்பு சாதி லிங்கம்
கடற்சில்லு வசுவாசி காந்தஞ் சுக்குக்
கராம்புமிள கதி..ர மோம மேலம்
அடற்காயஞ் சாதிக்கா யிலவங் கத்தோ
லரிதாரந் துரிசுமனோ சிலைவெ ளுத்தல்
கடுக்காய்திப் பிலியிருசீர் நெல்லிக் கெந்தி
கருதுநவ சீனசவர்க் கார மூன்றே 64

எயுமிவை சமனிடித்துச் சூர ணித்தே
யிடுகடுக்காய் சுக்கவித்த நீரிற் கொள்ள
வாயுவகை தீருமே வெப்பு மிஞ்சி
வாந்தியுறிற் றேனிலே யருந்த நன்றாம்
நோயவற்றிற் கேற்றவனு பானங் கொள்ள
நூலறிந்து சிவநாம நுவலு மன்பர்
தீயபிற விப்பிணிதான் றீரு மாபோற்
றீர்ந்துவிடு மெனமுனிவர் செப்பி னாரே 65

### பக்கவாயு குணமும் சிகிச்சையும்
### (மற்றொருபிரதியிற் கண்டபடி)

வருத்தமுற வலித்தடசிக் குத்தி முட்டாய்
மலசலத்தை யடைத்திருக்கி மயக்கி வேர்த்தே
திருத்தமற வொருபுறத்தில் விதையை வாங்கித்
தீமையாய் வீங்கிமெத்தத் துயரஞ் செய்யும்
பெருத்தவுள்ளி யாமணக்க மெண்ணெய் கொள்கப்
பெரியசா ரணைக்காயங் கொன்றைக் காயம்
பொருத்தமுறுங் கொம்மடிக்கா யெண்ணெய் நன்று
பொருவரிய கொன்றை யெண்ணெய் தானு நன்றே 66



### உள்ளியாமணக்கெண்ணெய்

மாவிலங்கை நொச்சியுவா யாடா தோடை
வருமுருங்கை காற்றோட்டி புங்கில் வேரும்
காவிலங்கு வேர்வகைக்குப் பலமூன் றாகக்
கருதியிடித் தெட்டொன்றாய்க் கஷாயம் வாங்கிப்
பூவிலங்கு சிற்றேரண் டெண்ணெய் கொத்துப்
புகல்சதுரக் கள்ளிப்பால் காற்கொத் தின்னும்
பாவிலங்கு வெள்ளையுள்ளி பலமு மூன்று
பருங்கடுக்காய் கடுகுதிரி கடுகு காயம் 67

காயமுட னேர்வாளங் கழஞ்சு மூன்று
கரைத்தெரித்துப் பதத்தில்வடி கட்டிப் பக்க
வாயுவுடன் சூலைகுன்மங் கெர்ப்ப வாயு
வகைக்கெல்லாங் காசிடையுட் கொள்ளப் போகும்
தூயவெண்ணெய் தனிற்பாதி கள்ளிப் பாலுஞ்
சொல்லியவா எமுங்கூட்டா தெரித்தி றக்கி
நேயமுடன் மாலையிலே யதனைக் கொள்ள
நேரிதா மெனமுனிவர் நிகழ்த்தி னாரே 68

### உள்ளியெண்ணெய்-பேதிக்கு

வெள்ளையுள்ளி பலமாறு நொச்சி யிஞ்சி
விளம்பியசா ரணைமூல முழக்குச் சாறு
எள்ளலறும் பூனைதரு கழற்சி தன்னி
லியைந்தபருப் பதுபசுப்பால் தனில வித்தே
உள்ளபடி யொருபத்துக் கடுக்கா யிந்துப்
போரொன்று கழஞ்சைந்து சதுர மான
கள்ளிதனிற் பால்கழஞ்சு தேங்கா யெண்ணெய்
கருதுமுரி கூட்டிவடித் துள்ளே கொள்ளே 69

### சாரணைக் காயம்

சாறணைக் கழங்கிந் துப்புத் தழலுடை சுக்க துள்ளி
சீறுசிற் றேரண் டெண்ணெய் திகழ்கொடு வேலி வேரும்
கூறுநேர் வாளமஞ்சு குலவிய பொரிகா ரந்தான்
வீறுயர் காய முண்ண விட்டகன் றோடும் வாய்வே 70

**சாரணைக்காயம்-2**

வெள்ளுள்ளி முருங்கைப் பட்டை வெண்கழற் பருப்புச் சுக்குத்
துள்ளுசா ரணையிந் துப்புத் துலங்சிற் றோண்குடெண்ணெய்
உள்ளநேர் வாள மைந்தி னுடனரைத் தொன்றாய்க் காய்ச்சி
மெள்ளவே காய முண்ண விட்டகன் றோடும் வாய்வே 71

**கொன்றையிலைக்காயம்**

நிலபாகல் பிரமிகொன்றை யினலயின் சாறு
நின்றசா ரணையுள்ளி சுக்கிந் துப்பு
நலகாயங் கடுகுபொரி கார மோடு
நவில்கழற்சிப் பருப்புநேர் வாளங் கூட்டிப்
பாலமாக விடித்தரைத்துக் காயஞ் செய்தே
பருகவரேற் பகர்வாயு பக்க வாயு
குலமான குடல்லாத மண்ட வாயு
குலைந்தோடிப் போமெனவே கூறும் வேதம் 72

**கொம்மடிக்காயெண்ணெய்**

அலகைதரு கொம்மடிக்காய்ச் சாறு தானு
மளவாக நாலுபடி சிற்றே ரண்டங்
குலவுமெண்ணெய் படியொன்று நிலத்தின் பாதல்
கூறுதிருக் கொன்றைதயிர் வேளை யோடு
வலியபெரு மருந்துவேர் பிரமி யெல்லாம்
வருசாறு படியொன்று வகைக்குக் கூட்டிப்
பலமுதவு சாரணையின் கிழங்கு பத்துப்
பலமதனிற் சாறுபடி பிழிந்து கொள்ளே 73

கொள்ளிவினிக் கற்கவகை கடுகு மஞ்சள்
கொடியபெருங் காயமுடன் மிளகு நற்சீர்
உள்கடு ரோணிநவச் சார மிந்துப்
புயர்சீனம் வெண்காரம் பொரியுங் காரம்
எள்ளலறு சவர்க்காரங் கழஞ்சொவ் வொன்றா
மிருபதுநற் கடுக்காய்நன் விதையை நீக்கி
வெள்ளையுள்ளி தோல்போக்கிப் பலமு நாலு
மிகுவாள மொருபத்துச் சுத்தி செய்யே 74



சுத்திசெய்து பசுப்பாலி லவித்த ரைத்துச்
சொற்றவெலாங் கூட்டிமெழு காம்பு தத்திற்
சித்திபெற வடித்தெண்ணெய் கழஞ்ச வீதந்
தின்றுவரக் காலைக்காம் மாலை தன்னில்
வைத்தநல்ல குழம்புபற்ப மாதி யாகு
மலமடைத்தல் சலமடைத்தல் குன்மம் பாவை
கத்தலுறு குடல்வாதம் பக்க வாயு
கடியவண்ட வாயுமுதற் கலைந்து போமே 75

**பஞ்சதிரவிய நெய்**

சீராரும் பஞ்சகென வியத்தி னெய்தான்
செப்புமைந்தும் வகையொன்று படியுங் கூட்டி
நேராரும் வெள்ளையுள்ளி பலமி ரண்டு
நிகழ்காய மிருகழஞ்சு தேவ தாரம்
பேராருந் திரிகடுகு கடுக்காய் மஞ்சள்
பேசுநவச் சாரமிந்து சீனக் காரம்
கூராருஞ் சவர்க்காரம் பொரியுங் காரங்
குலவியவெண் காரமுடன் சிற்ற ரத்தை 76

சிறுநாகம் பூக்குலக்காய் கடுகு ரோணி
செய்யவசு வாசிகாரம் பிவைவ கைக்குக்
குறையாமற் கழஞ்சொன்று வாளம் பத்துக்
கூறுவிதை கள்ளிப்பா லைங்க ழஞ்சு
முறையாக வரைத்துவடித் துள்ளே கொள்ள
முன்னுரைத்த நோய்பலவு முதரந் தன்னிற்
கறையாக வருமாமை யெகுத்துச் சூலை
கடியபல நோய்களெலாங் கரைந்து போமே 77

**கைமருந்துகள்**

சபதிக்காய்-5-மிளகு-ஆழாக்கு. முடிதும்பைத்துளிர் பிடி-1 கூட்டியரைத்துப் பாக்களவு பனங்கட்டியிற்றின் றுவாப் பககவாயு முதலியன தீரும்.

வெள்ளுள்ளி-பலம்-1-பெருங்காயம், கழற்சிப்பருப்பு, மிளகு, சுக்கு-வகை-கழ-2,அரைத்து முன்போற்கொள்ளவும்.

வேப்பங்கொழுந்து பிடி-1, உள்ளி, காயம், மிளகு, சுக்கு-கழ-2.
முன்போலரைத்துக்கொள்ளவும்.
முருங்கைப்பட்டையும் உப்புந்துவைத்து ஆட்டுப்பாலிற் கொள்ளவும்.
தில்லையிலையும் தேங்காய்ப்பூவும் துவைத்துப் பிழிந்துகுடிக்கவும்.

**வேதாளவாயுவுக்கு**
**கழற்சியெண்ணெய்**

பூதவே தாளமுதல் வாய்வுக் கெல்லாம்
பொருந்தவொரு கழற்சியெண்ணெய் புகலக் கேண்மின்
சீதமறு கழற்சியுறு பருப்புத் தானுந்
திறமாகப் படியொன்றை யிடித்து நன்றாய்
ஏதமற நாலுபடி நீரி லிட்டே
யெரித்திறக்கி யொருபடியாய்ப் பிசைந்தி றுத்துப்
போதமுறு மெள்ளெண்ணெ யேரண் டெண்ணெய்
பொருந்துமிலுப் பெண்ணெய்நிம்ப வெணணெ யோடே 78

எண்ணமுறு தென்னையெண்ணெய் படியொவ் வொன்றா
யிட்டதிலே கழற்சிதனிற் பருப்பா ழாக்கு
வண்ணமுற வரைத்தின்னஞ் சாதி லிங்க
மனோசிலைசெங் காந்தமொடு மாலின் றாரம்
திண்ணமுறு பாதரச நெல்லிக் கெந்தி
சிறந்தகல்நார் கல்மதநற் கடுகு ரோணி
நண்ணுகருங் குங்கிலியங் குக்கி லொன்று
நாற்றகழஞ்சா மெட்வெிதை நாற்பதாமே 79

ஆமின்னு நேர்வாளங் கொட்டை நூறு
மவித்தெடுத்த கழற்றியினீ ரதனா லாட்டித்
தாமின்னு மெட்டுநா ளடுப்பில் வெந்து
தகுமெழுகு பதம்வடித்துச் சாரு மெண்ணெய்
..மினன் முரைத்திடக்கேள் சிரத்தில் வைத்து
நவில்கடுகு புகையூட்டி வெந்நீர் மூழ்கப்
போமின்னும் பூதவே தாள வாயு
பெருந்துபல வாயுமுதல் முயல கண்டன் 80



ஆதியாம் பன்னிரண்டு வலிக டாமு
மகலாத வலியதே வதைக ளோடே
ஓதுமா வஞ்சனைசூ னியங்கள் பெல்லி
யொழியாத பசாசுமுதற் பறந்து போகும்
வாதமாம் வெடிகரப்ப னொடுக்க ரப்பன்
வலியபெரு வாதமுதல் வாத சன்னி
சேதமாங் குடல்வத மண்ட வாயு
தீருமென வேமுனிவர் செப்பி னாரே 81

**சகலவாய்விற்கும்**
**திருக்கொன்றை யெண்ணெய்**

திருக்கொன்றை யெண்ணெய்தனைச் செப்பக் கேண்மின்
சிறந்தகொன்றைச் சாறுதயிர் வேளைச் சாறு
உருக்கொண்ட பிரமியிலைச் சாறு வேலி
யோரளவு பெருங்காய மிந்துப் போடு
வெருக்கொண்ட வெள்ளுள்ளி யொக்கச் சேர்த்து
விளங்குமா மணக்கினெண்ணெய் விட்டுக் காய்ச்சி
மருக்கொண்ட பதத்தில்வடித் தருந்தக் குன்மம்
வலியகுடல் வாதமுதல் வாயுப் போமே 82

**வாயு மரவிலங்கமெண்ணெய்**

மாவிலங்கை முருங்கைநொச்சி யுவாயெ ருக்கு
வளர்கான்றை காற்றோட்டி கால டக்கி
தேவிலங்கு பெருமருந்து சித்ர மூலஞ்
சிவதையுடன் திருகுகள்ளி சதுரக் கள்ளி
காவிலங்கு புங்குதில்லை யசுவ கந்தி
கன்முரிசு களப்பன்னை செங்கத் தாரி
பூவிலங்கு தூதுசா ரணையீர் முட்டி
புகலுத்த மாகாணி குருந்து தோடை 83

தோடையுட னெலுமிச்சை யாடா தோடை
துடரியர முறிசங்கு கண்டங் காலி
நாடுகாக் கணங்கோவை குத்துக் காலி
னவில்சமட்டி யிராசமா முருக்கு மிச்சுத்

தேடுமிரு வேலிவேர் பலமொவ வொன்று
சீவியிடித் துத்தூணி நீர்பு கட்டிச்
சேடமுற நாலுபடி யாய்ப் பிழிந்து
சேருமதி லைந்தெண்ணெய் படியொவ் வொன்றே 84

ஒன்றுபடச் சாறுவகை யுரைப்பன் கான்றை
யுறுநொச்சி மாவிலங்கை யுத்த மாணி
நன்றுபடுங் காலடக்கி காக்க ணத்தி
னவில்கோவை தோடையெலு மிச்சி தெல்லாம்
வென்றிபடு மிலைச்சாறு முருங்கை யர்க்கு
விளம்புமிவை வேர்ச்சாறு சதுரக் கள்ளி
துன்றுமதை யனல்வாட்டிப் பழிந்த சாறு
சொற்றவெலா மொவ்வொர்படி சூட்டிப் பின்னை 85

சூட்டியே யடுப்பேற்றிக் காய்ச்சிக் கற்கஞ்
சொல்லிருசீ ரகமேலமிலவங் கத்தோல்
நாட்டுமதன் பத்திரிமுக் கடுக மூல
நவில்காயம் வெளுத்தலுள்ளி வசம்பு மஞ்சள்
கூட்டுமிரண் டரத்தைசிறு தேக்குச் சன்னி
கூறுவிதை யகில்தேவ தாரு மல்லி
கோட்டமுடன் கடுகுசத குப்பை வாசி
குலக்காய்நற் காராம்புமா மஞ்சள் மோடி 86

மோடியுடன் பூதவிர்க்க மரத்த சந்த
முதியவிழால் வெட்பாலை கடுகு ரோணி
நாடுசிறு நாகமலர் கணித பேதி
நவிலுமரி தாரமா மிலகக் கெந்தி
பீடுதரு மனோசிலைகச் சோல மாஞ்சில்
பேசியகஸ் தூரிமஞ்சள் சாளி-யாவும்
தேடுமிவை யொருகழஞ்சு வீதம் வாங்கிச்
சேர்த்திடித்துக் கலந்துடன்பன் னிருநாட் காய்ச்சே 87



காய்ச்சியபின் மெழுகுபதம் வடித்த ருந்திக்
கடுகவே மேற்பூசித் தலைக்கும் வைத்துத்
தேய்ச்சுமுழு கிடவாதம் வாய்வெட் டெட்டுந்
தீராத வலிகளவை யாறி ரண்டும்
பேச்சலுறுஞ் சன்னிவகை மூவா றுந்தான்
பெருகுநதி சூழ்கதிரை நகரின் மேவிக்
கூச்சமற வழிபடுமெய் யன்பர் தங்கள்
கொடும்பாவந் தீர்வதுபோற் குலைந்து போமே 88

### உறட்டி

திரண்டுவரும் வாய்வுக்கு மருந்து கேளாய்
செப்புமுவாய் கொடுவேலி புங்கம் வேரும்
வரண்டவரை பொடிகாந்தம் வெள்ளளக் காரம்
வாரணத்தின் முட்டையில்வெண் கருவா லாட்டி
உருண்டிடுமே ரண்டவெண்ணெய் சற்றே குத்தி
யுவந்து றட்டி சுட்டருந்த வுதிர மாய்ப்போய்
அரண்டெழுந்த வாயுவது கலைந்து பின்ன
ரகன்றுவிடு நல்லெண்ணெய் மாற்ற தாமே 89

### பெருங்காயச் சூரணம்

பெருங்காயந் திரிகடுகு கடுக்காய் நற்சீர்
பெரிதான தான்றிக்காய் கரிய சீரம்
விரும்புமச மோதகமவெள் ளுள்ளி யிந்து
வீறுடைய வசம்புசம னாகக் கொண்டே
வருஞ்சரக்குப் பொன்னிறமாய் வறுத்தி டித்து
வகுத்துவெரு கடிகொள்ள வாயு வெல்லாம்
பொருந்தாம லகலுமென முனிவ ரானோர்
புகன்றனர்மா னிடர்தமக்குப் பொருந்து மாறே 90

### நொச்சிச்சருகுச் சூரணம்

தேடுநொச்சி கொடிக்கழற்சி சருகி னோடு
திருந்தி ..வள் ளறுகுடன்பச் சரிசி தானும்
ஈடுபட வொவ்வொர்பிடி யாயி டித்தே
யிந்துப்புக் கழஞ்சுபொடித் திதனிற் கூட்டிக்

கூடவே யரைத்தருந்தி வெந்நீர் கொண்டு
குளிர்ந்திடுநீ ரிற்குளித்துப் பத்தி யங்கார்
ஆடுமயில் வாகனன்றன் கருணை யாலே
யறைகின்ற வாயுவெலா மகன்று போமே 91

### சிதைவேர்ச் சூரணம்

காயமொன்று வசம்பி ரண்டு சித்ர மூலங்
கருதியவேர்ப் பட்டையது மூன்று சுக்கு
நேயமுட னாலோம மைந்து பின்னு
நிகழ்கடுக்கா யாறுதிப் பிலியு மேழு
தூயவெள்ளைக் கோட்டமெட்டு மரிச மொன்பான்
றொல்சிவதை வேர்பத்து வீதங் கொண்டே
ஆவின்பா லதில்வேடு கட்டி மேல்வைத்
தவித்துநிழ லுலர்த்தியிடித் தருந்த நன்றே 92

### பிரண்டைச் சூரணம்

செப்பிடும் பிரண்டைத் தண்டினைத் தூளாய்த்
திருவுற வரிந்தத னோடே
உப்பினக் கூட விட்டுடன் வறுத்தே
யுறுசிவப் புற்றிடு மாகில்
வைப்புறு முப்பைக் கழித்ததைத் தூள்செய்
மருந்துதிப் பிலியிந்து சுக்கும்
ஒப்பிடு மிங்கு மோமந்தூளருந்தி
லுதரத்திற் பொருமலுமாறும் 93

### சூலைவாயுச் சூரணம்

பாத்ரசஞ் சாரணைவேர் கடுகு ரோணி
பகர்ந்தவிவை கழஞ்சொன்று சுக்கு நற்சீர்
தீதகலு மரிதாரம் விழால்வெட் பாலை
திப்பிலிநற் சதகுப்பை கார்கோ லோடு
சேதமறும் வெண்காரம் வகைக்கி ரண்டு
செப்புகொடிக் கழற்சிதனிற் பருப்பு மூன்று
கோதகலு நேர்வாளம் பதினைந்து தாகக்
கொண்டுநொச்சி யிலைச்சாற்றி லரைத்தி டாயே 94



அரைத்தபின்னர் சில்லுப்போற் றப்பி யோட்டி
லமையவறுத் ததுசிவந்த பின்னெ டுத்தே
அரைத்ததனைத் தூளாக்கி நெய்யிற் கொண்டா
லகன்றுவிடுஞ் சூலைமுதல் வாய்வ னைத்தும்
உரைத்தபஞ்ச தீபாக்னி யட்ட சூர்ண
முள்ளியினிற் குளிகைசூ ரணமே லேகியம்
விரைத்தகுழன் மடமானே யிவற்றால் வாயு
விட்டகலு மெனவேதேம் விளம்பு மாறே 95

### பிரண்டைக் குழம்பு

சாற்றிடும் பிரண்டைச் சாறு தான்படி நால தாகும்
ஊற்றிடு மியங்கு நொச்சி யுவாயிவை யிலையொவ் வொன்றும்
தோற்றிடும் வில்வம் வேருஞ் சொற்றிடு தோடங் காய்போல்
ஏற்றிட வரைத்துக் கூட்டி யிருகழஞ் சிந்து சீரம் 96

சீர்பெறு காய மூன்று திரிகடு குள்ளி யோமம்
கூர்பெறு கடுகு நாலு கழஞ்சுறக் கூட்டித் தூவி
ஏர்பெறு பனையின் வெல்ல மிட்டதி லெள்ளி லெண்ணெய்
வார்மெழு காம்ப தத்தில் வருபசு மோர்சேர்த் துண்ணே 97

### உள்ளிப்பால்

வெள்ளை யுள்ளி தோல்பேக்கி நாழி யொன்று மிகவரைத்துத்
துள்ளக் காய்ந்த சட்டியினி லிட்டு மசித்துப் பசுவின்பால்
கள்ள மறவே படியொன்று விட்டு மிளகோ ராழாக்கும்
அள்ளு முலுவாப் பொடிதூவிக் காய்ச்சி யருந்த வாயுவறும் 98

## சூலைரோகம்

ஆதிதன் னருளான் முன்னோ ரருளிய வாயுள் வேதத்
தோதிய சூலை யீரொன் பானுறு பெயர்கு ணங்கள்
தீதறு சாத்தி யங்க ளசாத்தியஞ் செய்ம ருந்து
கோதையே யிவைக ளெல்லாங் குறித்துநீ யாய்ந்து கொள்ளே 1

## சூலைரோகத் தொகுப்பு

சுரமொன்று வாத பித்தஞ் சொல்லுசேற் பனங்கண் முன்று
உரமுறு சன்னி பாதத் தொன்றுபாண் டுரோகத் தொன்று
திரமுறு பீந சத்திற் சேர்ந்திடு சூலை மூன்று
வருபிர மியத்தி லொன்று மாற்றருங் கிரந்தி யொன்றே 2

வாயுநீர் தசையி ரத்தும் வகுத்ததோல் நரம்பொ டாறும்
ஆயதோர் நிதம்ப சூலை யாகவே யீரொன் பானாம்
மாயமா முரோக மொன்றின் மருவிடுந் தொந்தம் வெவ்வே
றாயதோர் சாத்தி யங்க ளசாத்திய மறிந்து கொள்ளே 3

## சூலை-18ல்-அசாத்தியம்-9
## சாத்தியம்-9

சயசூலை சன்னி சூலை தசைச்சூலை நீரின் சூலை
கயமுறு மத்தி சூலை கருதிய நரம்புச் சூலை
துயருறு பீந சத்திற் சுரோணித சூலை மின்னார்
நயமறு நிதம்ப சூலை நாசமா மண்டசூலை 4

சொல்லிய சூலை யொன்ப தசாத்தியந் தோகை யேகேள்
புல்லிய வாத சூலை பொருந்திய பாண்டு சூலை
அல்லல்செய் பித்த சூலை யறவுலர் சுரத்தின் சூலை
வல்லியே கிரந்திச் சூலை வாயுவின் சூலை யாமே 5

ஆகிய சிரத்திற் றானே யருஞ்சல நீரின் சூலை
ஏகிய கிரந்திச் சூலை யிவையொன்பான் சாத்தி யங்கள்
ஆகிய குணங்க ளெல்லா மறிந்துநீ தெளிந்து கொண்டு
பாகமாய் மருந்து செய்யிற் பலன்றரு மறிந்து கொள்ளே 6



## 1-சுரசூலையின்குணம்

மண்டியே காயந் தன்னில் வருத்திடுஞ் சுரமென் மேலும்
கொண்டிடக் கால்க ளோய்ந்து குறுக்கினிற் பொருத்திற்குத்தும்
விண்டிட விரல்க ளெல்லாம் விருவிருத் துடம்பி னோவாம்
கண்டிடுஞ் சுரத்தின் சூலை யாமெனக் கழறி னாரே 7

சுரமொடு கால்க ளோயுங் †கழுத்தடி நொந்து காட்டும்
உரமுறு பெலமுங் குன்று மூதையு மெரிந்து விம்மும்
சிரமுழு திடிக்குந் துண்டஞ் செம்மிடுஞ் செவியி ரண்டும்
சுரமுறு சூலை யென்று சொல்லுவர் முன்னோர் தாமே 8

## அத்திசுரசூலை

அக்கினி மந்த மாகி யறவுலர்ந் தென்புக் காய்ச்சல்
மிக்ககா திரைச்சல் மந்த மிகுந்திடு மூக்கி னீர்கள்
தக்கதோர் பித்தஞ் சோகை பாண்டுருக் கபால குன்மம்
கைக்குமாம் வாத பித்தங் கருத்தினிற் கண்டு கொள்ளே 9

குத்திடு நகக்கண் டோறுங் கொதித்திடு முடலெண் சாணும்
வற்றிடும் பாவை போல்நா வரண்டிடும் பல்லு நோகும்
புத்திமா றாட்டம் பண்ணும் பொருத்திடங் கனத்துக் கட்டும்
அத்திதன் சுரத்திற் சூலை யாமென வருளிச் செய்தார் 10

## சிகிச்சை
## உவாயிலைக்கிருதம்

பொருந்திடு முவாயின் சாறு பொடுதலைச் சாறு கையான்
‡திருந்துமு விலையின் சாறு சேர்வகைக் குரிய தாக
அருந்திடு நறுநெய் நாழி யரியவெள் ளாட்டின் பாலும்
ஒருங்குற விட்டுக்கற்க முரைத்திடக் கேட்டி டாயே 11

ஆரதி மதுர மோம மரியநல் விளங்கங் கோட்டம்
சீரக மிரண்டு தேற்றா திரிகடு கடுகோ டுள்ளி
பாரில வங்கஞ் சாதி பத்திரி கைப்புப் பச்சை
காரகி லெட்டி வித்துக் கருதொன்று கழஞ்சி ரண்டே 12

†-கண்குழி என்றும்
‡திருந்திய குப்பைமேனி-என்றும

ஏலவே யிடிபொ டித்த விதைநறு நெய்யிற் றூவிச்
சாலவே திரண்டு வெந்து தகும்பதத் திறக்கிக் கொண்டு
காலமே கரண்டி கொள்ளக் கடுஞ்சுர சூலை யெல்லாம்
ஞாலமே யறியத் தீரு மெனமுனி நவின்றிட் டானே 13

### செங்கத்தாரியெண்ணெய்

செய்கத் தாரி வேர்ப்பட்டை சிறக்க விடித்துப் பலமொன்று
தங்குந் திரிகடு கிந்துப்புச் சார்வெள் ளுள்ளி யிருசீரம்
பொங்குஞ் சோமன் பொரிகாரம் பூத விருக்க மிவைகழஞ்சு
மங்கா தெண்ணெய்நாழியினில்வடிவாயரைத்துவெந்துகொள்ளே 14

கொள்ளாயெண்ணெய்நாற்பதுநாட்குறித்தேதேயினிப்புப்புளிதவிர
நன்னார் சுரத்தின் சூலையெலா நசமாகு மென முன்னோர்
தள்ளா துரைத்தா ரிதுசெய்யத் தரணி யோர்க ளறிந்திடுமின்
கள்ளார் குழலாய் கைகண்ட மருந்தென் றுரைத்தார் கற்றோரே 15

### மேற்பூச எண்ணெய்

திருகு கள்ளி வேர்ப்பட்டை சிறக்கத் தட்டிப் பிடியொன்றை
உரிய வெண்ணெய் தனிலிட்டே யூறிக் காய்ந்தால் வடிகொண்டு
இருகால் கரங்கள் பொருத்துகளி லிசையத் தடவி வெந்நீரில்
மருவும் புளியி நிலைகூட்டி மாதே வார்க்கில் வலிவிடுமே 16

### தழுதாழையெண்ணெய்-முழுக.

வாத மடக்கி நீர்குறுணி வருமெள் ளெண்ணெ யிருநாழி
சீத மடக்குஞ் சிற்றம்டடி சிறந்த வேரும் பதின்பலமாப்
போத நறுக்கி நீர்பதக்கிற் புகட்டிக் காய்ச்சி நடிலொன்றாய்க்
ரோதை மடக்கிப் பழிந்துவிட்டுக் கூட்டுங் கற்கங் கூறுவன் கேள் 17

கேளாய் கராம்பு சாதிக்காய் கிளரு மேல மிலவங்கம்
தாளா மதுரஞ் சரளமுடன் நகரங் கோட்டஞ் செண்பகப்பூத்
தூரா மரிக மதிவிடயந் துலங்க வொன்று காற்பலங்கொள்
வாளார் விழியாய் பொடிதூவி வருவெள் ளாட்டின் பாலவிட்டே 18



விட்டே காய்ச்சிப் பதத்தில்வடி வெந்நீர் தன்னின் முழகிவரக்
கட்டார் சூலைக் கடுப்பினொடு காந்து மத்தி சுரம்போகும்
தட்டா திதனைச் செய்யுமெனச் சாகா முனிவ னுரைத்தபடி
மட்டாய்ச் செய்ய வல்லீரேல் வருத்தும் வியாதி மாறிடுமே 19

### எட்டிநெய்-உள்ளேகொள்ள

எட்டிக் கொட்டை யொருபிடிகொள்ளிடித்துத்தூள்நெய்யிருநாழி
விட்டுக் காந்தம் வெண்காரம் வெள்ளை யுள்ளி பலமொன்று
தட்டி யரைத்துக்கரைத்துவெந்துதானேய்பதத்தில்வடிகொண்டு
சிட்டி யளவு மண்டலங்கொள் தீராச் சூலை சுரம்போமே 20

எட்டிக்கொட்டையைப்பிளந்து உள்ளிருக்கும் முளையை நீக்கிவிட்டு தேற்றாவேர்ச்சாற்றில் இருநாழி நேரம் அவித்துக்கழுவி உலர்த்திக் கூட்டவும்.

### காந்தசூரணம்

காந்தங் கெந்தி பறங்கிவேர் கருதுங் குக்கில் சாதியைந்து
போந்த சித்ர மூலிவேர் பொரியுங் காரங் குறாசானி
சாந்த மான திரிகடுகு தகவே யொவ்வொன் றொருபலங்கொள்
ஆய்ந்தே யிடித்து வெருகடிதே னருந்தச் சூலை சுரம்போமே 21

### வாதசூலை

தேக முழுதுங் கனப்புண்டாய்த் திமிர்த்து மெத்தவிருவிருக்கும்
பாகம் பற்றி விறைத்திருக்கும்பாதம்விரலுங்கெண்டையுநோம்
மோக மசைவை தனிற்றிரளு முடக்கு மூரி விக்கலுமாம்
தாக மன்றி மலஞ்சிக்குந் தானே வாத சூலையிதே 23

### ‡வாதசுரோணித சூலை

சிரமுறு நாடி யூடே சேருநீ ருடலிற் பாய்ந்தே
உரமுறு மசைவைப் பற்றி யூன்றியே கனத்து விம்மித்
திரமுறு வாயு மென்மேற் செறிந்துளே குத்தி நோவாம்
உரமுறு வாத ரத்த சூலையென் றோதி னாரே 23

‡இச்செய்யுள் சிலபிரதிகளில் “வாதசூலை“ என்ற தலைப்பில் இரண்டாஞ்செய்யுளாகவும், மற்றுஞ்சில பிரதிகள் வாதவா யுச்சூலை என்ற தலைப்பில் முதற்செய்யுளாகவும், காணப்படுகின்றது. இதன் நாலாமடியும் அவ்வேறுபாட்டிற்கேற்ப முறையே “வாதசூலையென் தானோதினாரே“ என்றும்’வாதவாயுச்சூலையென்றோதினாரே“ என்றும் வேறுபடுகின்றது.

### வாதவாயுச்சூலை

பிடர்முள்ளந் தண்டு பிட்டி பெருந்துடை மன்னை முட்டி
உடல்விலா நெஞ்சு கைக ளுளைந்தவை குத்தி நோவாம்
கடலுறு திரையே போலக் கதறியே வயிறி ரைக்கும்
அடர்வினை வாத வாயுச் சூலையென் றருளி னாரே 24

### வாதநீர்ச்சூலை

கைகால் விரல்கள் வீக்கமுடன்தனத்துத்திமிரத்துவிருவிருக்கும்
மெய்யேகுளிரும்வேர்வையுண்டாம்வெதும்புங்கண்ணுமுகந்தலையும்
ஐயும் பித்து மேற்கொள்ளு மாகம் புண்போல் நோவாகும்
உய்யும் வாத நீர்ச்சூலை யென்றே முனிவ ரோதினரே 25

### சிகிச்சை

### குடிமருந்து

ஆண்டு நூறளவு சென்ற நிம்பத்தோ லதனைவெட்டி
நீண்டதோர் பலமு நூறு நேர்ந்தெடு கடுக்காய் நூறு
ஈண்டுகோ சலமுந் தூணி யிவையொரு சாடி யிட்டு
வேண்டுமோர் சட்டி கொண்டு மேன்மூடி மண்ணைப் பூசே 26

பூசியே மேதி நிற்குந் தொழுவினிற் புதைத்துப் போட்டு
வாசமண் டலமுஞ் சென்றால் வடித்தெடு தினமு மக்கு
நேசமாய்க் காலமே கொள் நீக்கிடு புளியு முப்பும்
நாசமாம் வாத சூலை நாடிமண் டலங்கொள் வாயே 27

### குடிமருந்து-2

வேசரி லத்தி யந்நீர் விரவியே துவைத்து மண்ணில்
வாசமாம் பாண்டத் திட்டு †வகுத்தநீர் நாழி விட்டு
வீசிய விரவு சென்று விடிந்தபின் றெளித்துட் கொள்ள
நாசமாம் வாதசூலை நவின்றனர் முனிவர் தாமே 28

†வகுத்தநீர்-மேற்கூறிய வேசரிநீர், வேசரி-கழுதை-சுத்தசலம் என்பர் சிலர்.



### இரசசூரணம்

செருப்படி கழற்சி மேனி சிவன் வேம்பு முருங்கை தும்பை
கருக்குவாய் நொச்சி யெட்டு மருந்துளிர் பிடியாய்க் கொண்டு
விரிச்சநெல் லரிசி மாவு மேவிய சிறங்கை கூட்டித்
தரித்திடா விரச மூன்று காசிடை தானுங் கூட்டே 29

கூட்டியே யிடித்த தூளைக் கொடுவெந்நீ ரைந்து நாளும்
மீட்டுமே வேது பத்து நாள்விட வுளைவு குத்துச்
சேட்டமே செய்யும் வீக்கஞ் சுரோணிதஞ் சதைக ரைந்து
காட்டிலே யோடும் வாத சூலையா மென்று காணே 30

### வங்கப்புகை

வங்க முருகு முகந்தன்னில் வாரா யிரண்டு கழஞ்சிரசம்
பொங்குந் துரிசு மெலிமருந்தும் பொருந்துங்கார் கோல்கருஞ்சீரம்
அங்குஞ் சொன்னோ மரிதார மரிய மஞ்ச ளரிதகியும்
குங்கு லியமு மிவையொன்று கூட்டுஞ் சமனாய்க்குறிக்கொள்ளே

கொள்ளு மிரச வங்கவெட்டை குறையா தேழு பங்கிட்டுக்
கொள்ளும் பொடியு மெழுபங்காய் கூறுந் துணியி லுறமுடிந்து
கொள்ளும் புளியம் பொருக்கதனைக் கொளுத்தித்தழலாயானபின்பு
கொள்ளுங் †கிழியை யதிலிட்டுப் புகையை யூட்ட வல்லீரே 32

வல்ல புகைகள் தானேழும் புகைக்க வயிற்றில் மலந்தோடே
புல்லுங் குருதி கழிவதெனிற்பொருந்தாவெண்ணெய் கஞ்சியினில்
மெல்ல நுகர்ந்து வெந்நீரும் விட்டே யெண்ணெய் முழுகிவரச்
சொல்லும் வாத சுரோணிதமுஞ் சூலை தானும் விரைந்தோடும் 33

### பாஷாணப்புகை

கெவுரி வெள்ளை சாதிலிங்கங் கேளீ ரிரசந் துரிசுதுத்தம்
கதியா தோரொன் றரைக்கழஞ்சு கள்ளிப் பாலா லரைத்துப்பின்
இவைதான் சீலை தனிலூட்டி யிசைபாக் களவா யுண்டைசெய்து
தவிரா தொருநா ளொன்றாகத் தானே யேழு புகைகட்டே 34

†கிழி-மேற்கூறிய இருவகைமருந்துமிட்ட முடிச்சு.

கட்டாய் நீரி லுட்கிடத்திக் கருது மெண்ணெய் முழுகிவர
விட்டே யோடும் வாதங்கள் மேவுஞ் சுரோணி நீர்வாயு
கட்டுச் சூலை முடக்கும் போங் கைகா லுளைத் லிவையகலும்
மட்டா யிதனைச் செய்துவரின் மாறாச் சூலை மாறிடுமே 35

### பறங்கிப்பட்டைப்பதங்கம்

சங்கங் குப்பிச் சாறதனிற் சாற்றும் பறங்கி வேர்சீவி
அங்கு நாலு பலமிட்டே யந்நீர் சுவறி வற்றியபின்
துங்க மான நவபாண்டத் துள்ளே சூத மிருகழஞ்சு
பொங்குங் கெந்த ராசியுடன் பொருந்துஞ் சாதி லிங்கமுமே 36

மேவுங் குக்கில் கர்ப்பூர மிவையோ ரொன்று கழஞ்சுகொண்டு
தாவு மதன்மேல் வேடுகெட்டித் தக்க பட்டை யதிற்பரப்பிப்
பாவுஞ் சட்டி கொடுமூடிப் பரிவாய்ச் சீலை மண்செய்து
தூவுங் கனலை யரைச்சாமந் துளங்கா தெரித்தங் காறவையே 37

வையாய் சீலை மண்ணீக்கி வண்டிற் பட்டை தனையெடுத்துத்
துய்தா யிடித்துப் பொடியாக்கித் துலங்குந்தேனில் வெருகடிகொள்
எய்து மிச்சா பத்தியமா யிசையப் பத்து நாளுண்டு
வெய்ய வெந்நீ ராமணக்கி னெண்ணெய் தேய்த்து முழுகிடுமே 38

மேவுஞ் சூலை கிரந்திகுட்டம் வெய்ய சுரோணி வெடிசூலை
தாவுங் கடுப்பு வலியுளைவு சலதோ ஷங்கள் பீநசம்போம்
கூவு முடக்கு நரம்பிசிவு குரலி னரிப்பு மிவைதீரும்
.பாவித் திதனைச் செய்துவரிற் பறங்கி ரோகம் பாறிடுமே 39

### குடோரி

முழங்கால் மூட்டில் நீரிரத்த மோதிக் கனத்து விம்மிநிற்கில்
வளைந்த குடோரிக் கொம்பாலே வாங்கி யிரத்தந்தனையெடுத்துக்
களைந்தே நீக்கி விட்டதற்பின் கடுகோ டுள்ளி மிளகுசுக்குப்
பழஞ்சேர் கடுக்கா யிவையரைத்துப் பூசச் சூலை பாறிடுமே 40



### ஆயிலெண்ணெய்

மேவிநீர் கரிய ரத்தம் விலகிடா தடர்த்து விம்மிற்
காவியங் கண்ணி னாளே கருதியே முழக வெண்ணெய்
தாவுமா யிற்றோல் வில்வஞ் சாற்றிடு மிளகுதான்றி
காவினன் னாரி முத்தங் கதித்திடு சிற்ற மட்டி 41

முன்னைவேர் நொச்சி வாத மடக்கிவேர் முதிய வேம்பு
சொன்னகா ரகிலும் வேங்கை துலங்கமுக் கிராவேர் சீந்தில்
சின்னிவே ரோடு கையான் றிரிபலை முதிரை மாடம்
மின்னனாய் மிளகு சந்தம் வெட்டிவேர் லாமிச் சாமே 42

ஆனவெள் ளாட்டு மாம்ச மவையவி சஷாய மாக
†ஆனவேப் பெண்ணெய்தேங்காயெண்ணெயாமணக்கினெண்ணெய்
ஆனவெள் ளாட்டின் பாலு மாவின்பா விளநீர் தானும்
ஆனமுற் கஷாய மெண்ணெ யவையெலாங் கலந்து காய்ச்சே 43

காய்ச்சிடு கற்கங் கோட்டஞ் சந்தனங் கராம்பு பத்ரி
கூச்சசில் தேவ தாரங் கூறுமுக் கடுகு மஞ்சள்
பாச்சிடு மரிசி யாறு பகர்ந்திடு குக்கில் பட்டை
வாய்ச்சதி மதுர மாஞ்சில் மஞ்சிட்டி புழுகு சட்டம் 44

தக்கோலம் வரச மைந்து சாத்திர பேதி கல்நார்
கற்பாசி செண்ப கப்பூக் காணெரி யரிசி யின்பால்
கர்ப்பூரஞ் சிவந்த சந்தங் கழஞ்சுமூன் றவையே யாகக்
கற்பகமே யரைக ரைத்துக் காய்ச்சியே பதத்தில் வையே 45

வையே தயிலம் வகைப்படியே வடித்து வெந்நீர் முழுகிவரக்
கைகால் துரந்த வீக்கமும் போங் கனத்த வரத சுரோணிதநீர்
கையும் வாயு வுடற்கடுப்பு நடுக்கந் திமிர்ப்பு விருவிருப்பு
உய்யும் படியே தீருமென வுரைத்தார் முனிவ ருலகோர்க்கே 46

†மானமா மெண்ணெய் மூன்று மருவுவேப் பெண்ணே யொன்று-என்றும் பாடம். எண்ணெயென்பது எள்ளெண்ணெய்.

**பித்தசூலை**

கைகா லுளைந்து வாய்கசந்து கண்ணு முகமு மஞ்சணித்து
மெய்யே கடுக்கித் தலைவலித்து மேனி வரண்டு வெளுப்பாகித்
துய்ய நீர்மஞ்சணித் தெரித்துத் துலங்கப்பொருத்தெல்லாமுலைந்து
வெய்தாய்த் திரண்டு விருவிருக்கும் பித்த சூலை யெனவிளடபே

நெஞ்சொடு விலாவும் வற்றி நீர்மல முகஞ்சி வந்து
பஞ்சுபோல் நாவுங் கண்ணும் பாண்டமும் வெளுப்ப தாகி
மிஞ்சவே யூதை யுண்டாய் வெடித்திடுந் தேக மெல்லாம்
வஞ்சமாம் பிதத் லை யென்றுதான் வழுத்தலாமே 48

**பித்த விஷநீர்ச்சூலை**

இருவிழி யிதழ்பல் நாவு மிருதந்தங் கறுத்துக் காயம்
பொருமியே யூதை விம்மிப் பொருந்துறு மிடங்க ணோவாம்
திருகியே வலிக்கு மூர்ச்சை சேர்திடுங் கைகால் கட்டும்
பெருகிடும் விடநீர் பித்த சூலையா மென்று பேசே 49

**சிகிச்சை**

**பறங்கிப்பட்டை நெய்**

குலவும் பறங்கிப் பட்டையது குறுகச் சீவி நாலுபலம்
நலமாய்த் தண்ணீர் பதக்குவிட்டு நவிலு மிரண்டு படியாக்கிச்
சொலவே வடித்து நெய்நாழி தோன்ற விட்டு மேன்மருந்து
பெலமாங் குக்கில்சுத்திபண்ணிப்பேணிப்பலமொன்ற திற்கரையே 50

கருது மரிசி வகையாறு கடுகு ரோணி வெண்கோட்டம்
அரிய மதுரம் வாய்விளங்க மரத்தைதிப்பிலி மூலந்நார்
துரிசு து.. மதிவிடயஞ சுத்திக் கெந்தி சாதியைந்து
மருவு திரிபலை திரிகடுகு சிவதை வகைக்குப் பலங்காலே 51

காலந் துடனே யரைத்து வெந்து கரண்டி யரைமண்டலமருந்திச்
சீலத் துடனே புளியுப்பு நீக்கித் திடனா யிருப்பீரேல்
மேலைக் குத்தி விறைத்தவலி வெடித்த விடநீர் சுரோணிதமும்
ஞாலத் துள்ளோர்க் குறும்பித்த சூலை நாச மென்வறியே 52



**வெண்ணெய்க்கடுகு**

**விஷபித்தசூலைக்கு**

ஆவின் வெண்ணெய் நாழிதனி லரிய லிங்க மொருகழஞ்சு
பாவுங் கெந்தி திரிகடுகம் பறங்கிக் கிழங்கு திரிபலையும்
மேவு மரிசி வகையாறு விளங்கம் விடயம் வெள்ளுள்ளி
கூவுங் காசுக் கட்டியிவை கூட்டிக் கடுகாய் வெந்துகொள்ளே 53

**மிரியாதி கிருதம்-முமுக**

மிளகு வறுத்துப் பொடியுழக்கு மேவு நறுநெய் படியொன்றில்
†அளவாய் விரவிச் சாதியைந்து மவினும் பணத்தி னிடைகூட்டி
வளமாய் வெந்து வடிபதத்தில் மதித்து வெந்நீர் முழுகிவர
உனதாம் பித்த விடசூலை யெல்லா மோடி யொளித்திடுமே 54

**வாதபாண்டுச்சூலை**

அரையுந்துடையுங்கனத்திருக்குமசந்தேதிமிர்த்துவிறைத்திருக்கும்
உரையும் பொருத்து மிகக்கூடி யூதிக் கனக்கும் வயிறுமுகம்
புரையாய் வீங்கும் புறங்காலும் பொருமு மூதை திரைபோல
உரையா விந்தக் குணம்வாத பாண்டுச் சூலை யெனவோரே 55

**பித்தபாண்டுச்சூலை**

கண்ணு முகமு நீர்மலமுங் கருதும் பல்லு மஞ்சணிக்கும்
கண்ணும் வயிறுந் துடைகனக்கு நையக்குத்தும் பொருத்துகளும்
விண்ணிற் சுழலு முகமதைக்கும் வெதுப்பு மேலு மிகக்கனக்கும்
மண்ணிற் பிறந்தோர் பித்தமுறும் பாண்டுச் சூலை வகையாமே

**சேற்பனபாண்டுச்சூலை**

உரமும் வற்றி கரம்பெழுந்தே யூதை மிகுந்து நெஞ்சிடிக்கும்
சுரமு மென்மேன் மாறாது தோன்று மெலும்பு தொறுங்கட்டும்
கரமுங் காலுந் தளர்ந்துவருங் கண்ட நொந்தே யிருமலுமாம்
திரஞ்சேர் சேற்ப பாண்டுவினாற் சேருஞ் சூலை யிதுவாமே 57

†அளவாய் விரவிஎன்பது சாதியைந்து என்பதனோடு சென்றியையும்.

**சன்னிபாத பாண்டுச்சூலை**

அமய்யெலாந் தழன்று விம்மி வேர்த்துநாக் குழறிப் பேசும்
கைகள்கால் சந்து கட்டுங் கடுத்திடும் பொருத்துத் தோறும்
துய்யதோர் செவியு மந்தந் துடித்திடு முடலெண் சாணும்
தையலே சன்னி பாத பாண்டுவின் சூலை சாற்றே 58

**விஷபாண்டுச்சூலை**

..பினி லோர்பால் வீங்கு முளைந்திடு மென்பிற் கட்டும்
தடங்கண்ணு முகம்வெ ளுக்குந் தாகமுந் தவன முண்டாம்
அடர்ந்திடு மூச்சுத் தொய்வு மாகமுங் கனத்து விம்மும்
இடம்படு விடத்தின் பாண்டுச் சூலையீ தென்று செப்பே 59

**மூலபாண்டுச்சூலை**

தேகம்வரண்டுமுகம்வெளுத்துத்திமிர்த்துக்கைகாலுளைவுண்டாய்ப்
பாக மொக்க வீங்கிவற்றும் பரதா கித்துக் கண்டுங்கும்
சோக மிகுந்து மலஞ்சிக்குந்தோன் றும்பொருத்திற்கட்டுண்டாம்
ஆகந் தானு மிகக்கனக்கு மூல பாண்டு வதின்சூலை 60

**பாண்டுச்சூலை ஆறில்**

**அசாத்தியம்-3**

**சாத்தியம்-3**

சாற்றிடுஞ் சூலை யாறிற் றருங்கரும் பாண்டுச் சூலை
தோற்றிடுஞ் சன்னி பாத பாண்டுவின் சூலை யோடு
ஆற்றரும் விடத்தின் பாண்டுச் சூலையா மிவைகண் மூன்றும்
மாற்றரு மசாத்திய மாகு மறுமூன்றுஞ் சாத்தி யம்மே 61

**சிகிச்சை**

**மூலபாண்டுச்சூலைக்கு காந்தபற்பம்**

சுத்திசெய் காந்தங் கெந்தந் தூயரை பொடியிம் மூன்றும்
ஒத்திடு மரைப்ப லங்கொண் டுற்றமேன் மருந்து கேளாய்
வைத்தமுக் கடுகி னோடு முப்பலை விளங்க மோமம்
அத்தித்திப் பிலியே செய்ய கடுகுவெள் ளுள்ளி காயம் 62



காயநற் கராம்பு பத்ரி கடுகுரோ கணிவெண் கோட்டம்
நேயமபர் கிவதை யொன்று நிறையரைப் பலம்பொ டித்துத்
துய்வெரு கடியா யுண்ணச் சொலுமூல பாண்டு சூலை
போய்விடு மென்று முன்னோர் புகன்றன ரறிந்து கொள்ளே 63

**சகலசூலைக்கும் திரிலோகபற்பம்**

இரும்புகா ரீயஞ் செம்பு மிவைமூன்றும் பொடிய ராவி
விரும்பியே பலமோ ரொன்று வெவ்வேறு சுத்தி பண்ணித்
திருத்தவே குமரிச் சாற்றாற் றிரண்டிட வரைத்து வாட்டி
வருந்தியே புடமும் பத்து வைத்திடு சிவக்கும் வண்ணம் 64

வைத்தரை கையான் சாற்றில் மறுபடி புடமு மூன்று
முத்தின நாவற் பட்டையைச் சாற்றினின் முப்பு டந்தான்
ஒத்தமுக் கழஞ்ச சூத முரியகெற் தகமுந் தாரம்
வைத்திரு கழஞ்சு சுத்தி மகிழ்தநரை தேசிச் சாற்றில் 65

காவியக் கண்ணி னாளே கருதிய புடமு மூன்று
மேவிய மருந்து தன்னை மேன்முருக் கிலைநீர் தன்னாற்
தாவியே யரைத்து முன்று புடம்வைத்துத் தவறு றாமற்
பாவையே நுணுக்கிக் கொண்டு மேற்பொடி பகரக் கேளே 66

பகர்ந்திடு பறங்கிப் பட்டை பாலினிற் சுத்திக் கெந்தி
மிகுந்திடா தொன்றி ரண்டு பலமது மேன்மருந்து
உகந்திடு கடுக மூன்று பலை மூன்று துரிசு துத்தம்
சுகந்தயஞ் சாதி யைந்து சொல்பஞ்ச வாசங் கூட்டே 67

கூட்டியிடித்துவெருகடிதேன்குழைத்துப்பற்பம்பணவிடைதான்
ஈட்டு மரைமண் டலமேகொண் டிதமா யெண்ணெய் முழுகிவரச்
சூட்டும் வாத பண்டுமுதல் வெக்குஞ் சூலை யோராறும்
வட்ட மறவே தீருமென வகுத்தார் முனிவர் மானிலத்தே 68

**இந்திராணித்தைலம்**

கடம்பமா விலங்கை புங்கு கருங்காலி வாகை வேங்கை
அடம்புநன் னாரி கோடை யமுக்கிரா வேம்பு கான்றை
முடங்கல்சா ரடையீர் முட்டி முன்னைலா மிச்சு வெட்டி
தடங்கணா யொன்று பத்துப் பலமது தறித்துக் கொள்ளே 69

கொள்ளே தூணி நீர்விட்டுக் கொதிக்கக்காய்ச்சிக்குறுணிகொண்டு
கள்ளார் குழலா யாட்டின் பால் காண மவித்த நீரிளநீர்
தள்ளா தேநீர் வெவ்வேறு சாருங் கஷாயஞ் சரி கூட்டி
எள்ளா ரெண்ணெய்நாலிலொன்றினியவேம்பினெண்ணெய்விடே 70

விட்டே கற்க மட்டவர்க்க மேவு மரிசி வகையாறு
கட்டாய் பஞ்ச வாசமுடன் கருதுஞ்சாதி யைந்து கல்நார்
சட்டந் தேவ தாரமதி மதுரஞ் சாந்தஞ் சடாமாஞ்சில்
மட்டா ரேல மிலவங்கம் வருமுக் கடுகு முப்பலையே 71

பலமொவ் வொன்று கால்கூட்டிப் பரிவா யிடித்த பொடிதூவிச்
சலம தறவே காய்ந்து வற்றித் தானே மெழுகு பதமானால்
நலமாய் வடித்து வெந்நீரில் நன்றாய் முழுகி வரும்போது
குலமாய் பாண்டுச் சூலையெலாங் குலைந்தே போகுங் குவலயத்தே

**பித்தபாண்டுச்சூலைக்கு**
**திரிலோக சூரணம்**

நவ்வற் பட்டைச் சாறுதனில் நவிலு மரபொடி பதின்கழஞ்சு
செவ்வே வெயிலில் வைத்தூறிச் சேர்ந்தா லிருப்புக் கிட்டமது
தவ்வித் தகர்த்துப் படியொன்று சாகினி மேதி யாநீரும்
நவ்வு நராநீ ரிவையொன்று நாழி கூட்டி யதனுளிடே 73

இட்டே காய்ச்சிக் கிட்டந்தா னிளாவி யிறுகி வரிலுலர்த்தி
மட்டார் காந் தங் கெந்தகமு மருவு மரிசி வகையாறும்
இட்டமுறுநற் சீர்கருஞ்சீ சேலந் திரிபலை திரிகடுகும்
தட்டா தோமம் விளங்கமித்து சாதி யைந்து காரமைந்தே 74

காரமைந்து சாரமைந்து கடிய வள்ளி யிவையெல்லாம்
ஓரொன் றரையாம் பலங்கொண்டே யுறவா யிடித்துச் சூரணத்துக்
கூருமிஞ்சிச் சாறதனில் வெகுகடி மண்டல முட்கொள்ளச்
சோரும் பித்த பாண்டுவுருச் சூலை விரைந்து போய்விடுமே 75



**கரிசாலையெண்ணெய்**

கையான் றகரைச் சாறுவாய் சமூற்சிச் சாறு பொற்காணி
துய்ய தேசிப் பழச்சாறு துளசிச் சாறு வல்லாரை
மையார் கூத்தற் சாறதுவு மஞ்ச விலைச்சா றவுரியுமே
வையா விளநீர் வெள்ளாட்டின் மருவும் பாலு மிவைசரியே 76

சரியா யெண்ணெ யடளிட்டுச் சரக்கு மினகு படி நுணுக்கிக்
கருகா தெரிந்வப் பதத்திவடி சாலை வெந்நீர் தனில்முழுக
அரிதாம் பாண்டு சூலையெலா மபன்றே யோடிப் போகுமெனப்
பெரியோர்சொன்னாக்முறையறிந்துபேணிச்செய்வாய்பெய்வளையே 77

**கிலேற்பனபாண்டு சூலைக்கு**
**குக்கில் நெய்**

சுத்திசெய் குக்கில் காந்தஞ் சோமன்வெள் ளுள்ளி மஞ்சள்
வித்தக விளக்க மோமம் வெந்தயங் கடுகு மேதை
சித்திர †மூலம் வெட்டி சிவதைரோ கணியிந் துப்புக்
குற்றமி வயிறு மொக்கக் கூட்டிநெய் நாழிவிட்டே 78

விட்டே வெள்ளாட் டின்பால் வெந்திடிற் கடுகு னோடே
கட்டா மரை மண் டலங்கொள்ளக் கபர்சேர் பாண்டு சூலையெலாம்
மட்டாய்த் தீருமெனமுன் னோர் வழுத்தும்வகைகள றிந்துகொண்டு
தட்டா திதனை யுண்டுவரிற் சயங்கள் சுவாத காசமும்போம 79

**சன்னிபாத பாண்டுச்சூலைக்கு**
**இரசகாந்தக்குளிகை**

காந்த மிரசங் கெந்தமுங் கதித்த நாவி யரிதாரம்
போந்த குக்கில் திரிகடுகு பொரியுங் காரம் வெள்ளுள்ளி
சேர்ந்த வசம்பு கடுரோணி சிவதை யிந்து முப்பலையும்
ஆய்ந்த நிமபத் தோற்சாற்றால ரட்டித் தேற்றி னளவுருட்டே

†மூலமெட்டிஎன்றும் பாடம்.

வேயைப் பொருந்தும் புயமின்னே விரும்பித் தசமூலிச்சாற்றில்
தோயக் கரைத்துக் கொடுப்பீரேற் சூலை பாண்டுதோஷமுதல்
மாயப் பிந்த மிவையெல்லா மாறு மெனமுன் னோருரைத்தார்
நேயத் துடனே யாராய்ந்து நினைவா யிதனைச் செய்வீரே 81

**விஷபாண்டுச்சூலைக்கு**
**கோசலக் குழம்பு**

கோவினீர் குறுணி தன்னிற் கூறிய கடுக்காய் நூறு
தொவுமிந் துப்புக் காந்தஞ் சாத்திர வேதி கல்நார்
காவுறு சித்ர மூலங் கடுகுரோ கணிவ சம்பு
பாவுறு குக்கில் மஞ்சள் பகர்திரி கடுகோ டுள்ளி 82

ஒதிய கார மைந்து முப்பைந்து சார மைந்து
ஈதெலாஞ் சமனாய்க் கூட்டி யிடித்ததிற் றூவி வெந்து
மாதுகேள் புன்னைக் காய்போன் மண்டல முண்டு வந்தாற்
காதிய விஷத்திற் பாண்டுச் சூலைநோய் கடுப்பும் போமே 83

**பிரேமகசூலை-4 வகையின்குணம்**

சுக்கிலங் கபமி தைத்தந் தோன் றிடுஞ் சதைக ணாலு
மிக்கநீர் தன்னில் வீழ்ந்து மெய்யெலா நையக் குத்தும்
அக்கியு மிகுந்து கைகா லவயவங் களிலே கட்டும்
இக்குணம் பிரமே கத்தின் சூலையென் றியம்ப லாமே 84

அறிவுலர்ந் தென்பு தொன்றி யருந்திடு முணவு காணா
துறம்மடக் கசைவு தோறு முகந்தியே கனத்துக் குத்தும்
திறமற மடக்கிக் கொள்ளுஞ் செம்மியே வீக்க மாகும்
உறுமிவை குணங்கள் கண்டா லுரைபிர மேக சூலை 85

அவையிலிந் திரியும் வீழு நோயசாத் தியமா மென்று
சவையுறத் தெரிந்து கொண்டு சாத்திய சூலைக் கெல்லாம்
கவையறுங் குணங்கள் கண்டு கட்டசாத் தியத்தை நீக்கி
அவையற மருந்து தன்னை யறைந்திடக் கேட்டிடாயே 86



**சிகிச்சை**
**பஞ்சகல்யாணித்தைலம்**

திருவே யெண்ணெ யிரண்டுபடி சித்ர மூலஞ் சாதியைந்து
கருவே வெள்வேல்விளாவிவற்றின்களிதோல்பிசின்கல்நார்மதுரம்
அரிசியாறு சிற்றரத்தை யவின்கா கோளி யதன்வர்க்கம்
உரிய பஞ்ச வாசமுட னோம மொன்று முக்கழஞ்சே 87

சேர நிறுத்தே யிடிபொடித்தத் திரண்டு வெந்து பதத்தில்வடித்
தாரக் கரண்டி யளவு கொண்டே யடைவே யுடம்பு தனிலுமிட
நீரிற் கடுப்புத் தாதுவிழல் நெரிர்க் கைகால் குத்துளைவு
தீரும் பஞ்ச கல்யாணி யென்றே பெயருஞ் செப்பினரே 88

**குக்கிற்கிருதம்**

சுத்திக் குக்கில் பலமொன்று துவரின் சிதையு மட்டவர்க்கம்
கொத்துச் சாதி வகையைந்து கோகில் கெந்த வர்க்கமுடன்
சத்திச் சார மெவச் சாரஞ் தகரங் கோட்டஞ் செண்பகப்பூ
அத்தித் திப்பி லரிசிவர்க்க மருவெண் துருக்கங் குறாசானி 89

சாதி லிங்கம் பறங்கிவேர் சாத்ர பேதி துரிசுதுத்தம்
ஒதும் பத்ரி முப்பலையு மோம முடனே குளவிந்தம்
ஈதோ ரொன்று முக்கழஞ்சா யிடித்து நறுநெய் பால்நாழி
மாதே தூவிப் பதத்தில்வெந்து வடித்துச் சீனி யதில்விரவே 90

விரவிக் கரண்டி மண்டலங்கொண் மேவு முப்புப் புளிதவிர்ந்தால்
உரைசேர் மேக மதில்வீழு முதிரம் விந்து கபமாதி
புரையாய் வீங்குங் கடுப்புளைவுபொருத்துத்தோறுங்கட்டுவதும்
திரமாய்த் தீரு மெனமுன்னோர் செப்புங் குக்கிற் கிருதமிதே 91

**கிரந்திசூலை**

பொருந்திடுந் திரிதோ ஷத்தாற் புடைத்தெழு கிரந்தி யாலும்
வருந்திடுஞ் சூலை செய்யுங் குணமதை வழுத்துக் கேளாய்
இருங்கரங் கால்க டோறு மிடருற வுளைந்து கட்டி
உரம்பெற வலித்து வீங்கி யூதையு மிகவுண் டாமே 92

மேவியே யசைவு தோறும் வெடித்ததிற் சலநீரி வீழும்
தாவிய கரங்கா லோய்ந்து தவனமே பற்றி நிற்கும்
சீவிய தாது நாச மெரித்துடன் சிறுநீர் வீழும்
காவியங் கண்ணி னாளே கிரந்தியின் சூலை காணே 93

### சிகிச்சை
### இரசதாரக்கிருதம்

கழற்சிநொச்சி புனமுருங்கை கரியமேனி பொடுதலை
காறிடும் பிராண்டை தும்பை வேறெடுஞ்சமன்பெறத்
துளிப்பிழிந் துழக்கதாய் வடித்தபின் கலந்திடு
சூதமுக் கழஞ்சுகெந்தி தாரமுங் கழஞ்செடு
பழக்கமுற்ற சாதி லிங்க மிருகழஞ்சு சுத்திசெய்
பட்டைகுக்கி லிருகழஞ்சு பண்புறப் பொடித்துமே
உழக்குநெய் யதிற்செறித் திடும்பதம் வடித்துமே
யுண்ண வெட்டு நாட்கிரந்தி சூலையோடு முண்மையே 94

### குக்கில் ரசாயனம்

குக்கில்பட்டை கெந்தகங் குறித்தொவ் வொன்று முப்பலங்
கொண்டுசுத்தி யானபின்பு கூட்டிடும் மருந்துகேள்
தக்கசீர மரிசியாறு கடுகமூன்று முப்பலை
சாளமுள்ளி சோமனுப்பு துரிசு துத்த மேல்முந்
தொக்க சாரஞ் சயிலகங் கடுகுகுந் துருக்ககமுந்
துய்யநற் கராம்பு பத்ரி சாதிமேவு காயுமே
மிக்கபத்ரி விடயமோம மவினிவை சமனெடு
வெதுப்பியே யிடித்ததூள் விரவுதேனு நெய்யுமே 95

செய்யசீனி கதலியின் பழத்தொ டிஞ்சி சேரவே
மெய்ய ளாவி யேபிசைந்து மேவியே யருந்திடக்
கைகள் கால்கள் மேவுசூலை கரடுவன் கிரந்தியும்
மெய்சொ றிந்து காதுகண் சொறிந்திடுங் கிரந்தியும் 96

மோதிடுங் கிரந்தியும் முதுவிஷங்கள் கடிவிகூஷம்
தீதுறுந் திமிர்விதங்கள் தினவுநாசி பீடமும்
மோதிடுங் கபங்களும் முனியும்வாத வாயுவும்
ஓதிடும் பவுந்தி ரங்க ளொக்கவோடு முண்மையே 97



### இராசசேகரக் குக்கிற் சூரணம்

சுத்தியான குக்கில் பட்டை கெந்தகந் துவர்ச்சிகை
தூயகார சாரமைந்து சாதி யைந்து தூபமும்
அத்திதிப்பி லீய ரத்தை கற்கட சிங்கியும்
மதிவிடய மானமஞ்சள் நாகுதேவ தாரமும்
கைத்தல்பாடல் குங்குலும் கஞ்சமிந்து ரோகணி
காதுமுக் கடுகுபாலை கல்லினாரு மதமுமே
தக்கசீர மோதமுள்ளி முந்திரீகை மதுரமுஞ்
சாற்றுவில்லை வாசமைந்து மூன்றுபத் திரியுமே 98

துரிசுதுத்த மவினொடுந் தூயகற்க வகையெலாஞ்
சொல்லுமொன்று முக்கழஞ்சு தூளதா யிடித்துமே
அரியவஸ்தி ரந்தனில் வடித்தெடுத்த சூரணம்
மளவுசீனி கூட்டியே யளவுநல்ல தேனினில்
பருகியே புளிப்பினோ டுப்பையும் மறந்திடு
பறங்கிசூலை யொடுகிரந்து யெரிவு குட்டம் புண்புரை
அருகியோடு மோடுமென் றகத்தியன் மொழிந்தன
னாறுமா முகத்துவள்ள லருணினைந்து முன்னமே 99

### அரிதாரபற்பம்

தக்கதார மிருபலங்கொள் சுத்திசெய் செருப்படிச்
சாறுவிட்டரைத்துமேவு வட்டதா யுலர்த்தியே
மிக்கவேல் புரசரசு புளிமரத் தோலிவை
வெந்தசாம்பல் விரவுசட்டி மீதுமேலுங் கீழுமாய்ப்
புக்கசீலை மண்பொதிந் தெரிப்பையாறு சாமமும்
பூவையே பிரித்தெடுத்து மேவுதேனி லெட்டுநாள்
நக்கவேர் பணங்கொளந்தி சந்திவிட்டி டாமலே
நாசமாங் கிரந்திசூலை சேர்பசூலை மூழ்குமே 100

### உலர்த்துசூலை

காயம் வற்றிக் கடுப்புண்டாய்க் கைகா லுளைந்து கனத்திருக்கும்
நோயு மிகுந்து நொந்துடம்பு நோக்கங் கெட்டுத் தாதுக்கிச்
சேயின் வடிவா யுளவங்கந் திரங்கிக் கிழம்போ லாமேனி
வாயு வுலர்த்து சூலையென வகுத்துப் பேசும் வாகடமே 101

### வாயுச்சூலை

கைகா லுளைந்து கணைதிரண்டுகாட்டும்பொருத்துத்தலந்தோறும்
மெய்யேநடுக்கும் விறைவிக்கும்விரல் கடோறும்விருவிருக்கும்
நொய்ய மேனி மெலிந்துவற்று நோகக் குத்து நகக்கண்ணில்
வெய்ய வாயுச் சூலையென விளம்பு மாயுள் வேதமதே 102

### சிகிச்சை

### அமுக்கிராவெண்ணெய்

மேவு மமுக்கிரா வெண்ணெய்தனை மேதினியிற்
பாவலரே வைக்கும் பரிசுகேள்-காவில்
வளரு மமுக்கிரா வாகைவேர் வேங்கை
தளைவு சாதாவேரி சீந்தில்-மிளகரணை
சாரணைவேர் நொச்சிவேர் சங்குப்பி வேரினுடன்
கூறிடு கொட்டை குறோட்டைவேர்- மீறிய
பம்பந் திராய்நாற் பான்மரத்தோல் லாமிச்சு
நம்புந் திரிகடுகு நன்னாரி-கொம்பாரும்
முப்பலை வெட்டிவேர் முன்னை முசுட்டைவேர்
செப்பு மிருவேலி சேரவே-ஒப்பாக
ஓரொன்று முப்பலமா யுறுசலிலந் நாலுபடி
வாரெட்டி லொன்றாய் வடித்ததற்பின்-சேரத்தில்
வெள்ளாட்டுப் பாலிளநீர் மேவுமெண்ணெ யோரளவாய்த்
தள்ளாத கற்கவகை சாற்றக்கேள் -விள்ளும்
மதுர முடன்றார மஞ்சளொரு நாலு
பொதியவிழ் கோட்டம் பழுகு-விதசட்டம்
குக்கில் கொடுவேலி கோரக்கர் மூலியுடன்
மிக்க சிறுமூல மேதைவகை-தக்கதோர்
சாதியைந்து செண்பகப்பூச் சடாமாஞ் சரத்தை கல்நார்
ஓது மரிசிவகை யோராறும் -போதவே
ஒவ்வொன்றும் முக்கழஞ்சா யொக்கவிடி பொடித்துச்
செவ்விதா யெண்ணெ யதிற்சேர்த்துத் -தவ்வா
மெழுகு பதமாய் விரைய வடித்து
வளமாய் முழுகிவா மானே- அழுகண்ணி
குட்டமொடு சூலை குளிர்வெதுப்பு நீள்கிரந்தி
வட்டமுறு புண்புரைகள் வாதநோய் முட்டுளைவு



வாயுவின் சூலையது மாதர் கனமயக்கும்
ஓயும் விடபாக முள்ளிருமல்- நோயிவைகள்
தீருமென முன்னோர் தெரிந்துரைத்த தன்மையினால்
ஆருமிது செய்வீ ரறிந்து. 103

### அசாத்தியம் 9ல்

### சிலேற்பனசூலை

தேகம் வரண்டே யிரும்லுமாய்த் தியக்க மிகுந்து கோளை..
ஆகம் புண்போ னோவுண்டா மசைந்த பொருத்துக்கிடை …
பாகம் பற்றி விறைவிறைக்கும் பதறக் குத்துங் கண்டுங்கும்
தாகம் மண்டி யுவாந்திமிகுஞ் சயத்தின் சூலைக் குணந்தானே 104

### கண்டங்கத்தரி லேகியம்

கார்குழலாய் கேள்கண்டங் கத்தரியின் லேகியத்தைச்
சீர்பெறவே வைத்தருந்தச் செப்புவேன்- நேர்கண்டங்
கத்தரிநற் றூதுவளை ..வில் வளர்பிரமி
உற்றசிறு முள்ளி யுடன்றோடை- குற்றமறும்
காரை யிசங்கு கருந்துளசி காணியுடன்
நேரான தேற்றா விலையிவையே- ஓரொன்
றரைத்துப் பலமூன் றவிகலநீர் விட்டுக்
கருத்துறவே யெட்டொன்றாய்க் காய்ச்சிப்- பொருத்தமாய்ச்
சீலைவடி கொண்டு செறிந்த கஷாயமதில்
மேலு மருந்து விளம்பக்கேள்- கோல
முறுபறங்கிப் பட்டை யுடன்முப் பலையும்
மறுவில்தேற் றாவாச மைந்து- சிறுமூலம்
சித்திர மூலந் திரிகடுகு குக்கிலதும்
ஒத்ததிரி ..த்திரியு மோமமுள்ளி –கொத்தமல்லி
சித்தரத்தை நாகஞ் சிவதை கடுரோணி
முத்த மதிமதுர முந்திரிகை- உற்றதோர்
சாதியைந்து காந்தஞ் சயிந்த லவணமோ
டோதுமிவை யோரொன்று முக்கழஞ்சு- மாதே
இடித்துவடி கட்டி யெடுத்தபொடி முன்னே
வடித்த கஷாய மதில்விரவித்- தடித்தபின்
சீனிகற் கண்டுடனே சேர்நெற் பொரிமாவும்

ஈனமறக் கூட்டி யிறுகியபின்- ஊனமறும்
இஞ்சிநீர் வார்த்தே யிளம்பாகு போலிறக்கித்
தஞ்சமுற மண்டலங்கொள் சாருநோய்- எஞ்சாது
மேவுஞ் சயசூலை மேலிளைப்புக் கால்கரங்கள்
தரவு முடக்குச் சயகாசம்- கோபிக்கும்
வட்டமுறு புண்புரைகள் வாந்திவிக்க லாதியவும்
தட்டாமறறீருமெனச் சாற்று 105

### சன்னிபாதசூலை

நாளுற வுடம்பு நோவாய் நையவே கொதித்துக் குத்தும்
கோளதா யுளைந்து வீக்கங் கொண்டிடும் பொருத்துத் தோறும்
பாழதா நாவ ரண்டு புளிப்பினிற் பகையே செய்யும்
தாளுற வயருஞ் சன்னி பாதத்தின் சூலை தானே 106

### நிம்பாதித் தைலம்

சொல்லுவேப் பெண்ணெய் நாழி தும்பைநீர் நொச்சிச் சாறு
புல்லிய வேளை மேனி பொடுதலை வீழிச் சாறு
நல்லவெள் ளுள்ளி யிஞ்சி நாடிய முருக்கின் சாறு
வல்லியோ ரொன்று நாழி வாங்கிடு மருந்து கேளே 107

திரிகடு கடுகோ டுள்ளி சிறுதேக்கு வசம்பு குக்கில்
மறுவில்கெந் தகத்தி னோடு மஞ்சிட்டி மாஞ்சின் மஞ்சள்
உறுபறங் கியின்வேர் சாதி யோமநற் காந்த மொக்கக்
குறியுற முக்கழஞ்சு கூட்டியே வெந்து கொள்ளே 108

கொடுத்திடு மண்ட லந்தான் கூறிய வுடலுந் தேய்க்கில்
நடுக்கிடுஞ் சன்னி பாத சூலையு ஈநச மாகும்
மடக்கொடி புளியு முப்பு மாற்றியே வேது வார்க்கிற்
கடுப்புடன் முடக்குக் கட்டுக் கருதிய வாதம் போமே 109

### மாங்கிஷசூலை

இயம்பி பொருத்துத் தோறு பென்புறு மிடங்க டோறும்
தயங்கவே கனத்து நொந்து தசையுற வெடித்து நோவாம்
வயங்கிழை மானே கேளாய் வரட்சியா யுடம்பு வற்றும்
மயங்கெடப் புலால்போல் நாறும் மாங்கிஷ சூலை தானே 110



### சிகிச்சை

இவ்வுரோ கத்தை மாற்றி லெழுந்திடுந் தசையை நீவி
வவ்வவே காரஞ் செய்து மருவிய பின்னர்த் தானே
நவ்வியங் கண்ணி னாளே நவிலரி தார பற்பம்
தவ்விடா தருந்தும் போது தசையினிற் சூலை போமே 111

### நாச்சூலை

மேவிய புறங்கை கால்கள் வீக்கமுந் தினவு மாகித்
தாவிய பொருத்துத் தோறுந் தறுகிடக் குத்தி நோவாம்
சீவிய கொப்பு ளம்போற் றிரண்டது வுடையுங் கண்டாய்
தாவிய நீரின் சூலை தான்செயுங் குணங்க டாமே 112

### இதற்குப் புகை

ஈயங்கால் தனையு ருக்கி யிரசமொன் றரையும் விட்டு
நேயமாய் வட்ட தாக்கி நெல்லிக்கெ ந்தகமுந் தாரம்
தூயெலி மருந்து துத்தந் துரிசகார் கோலுந் தூபம்
ஆயதோ ரிலுப்பைக் கட்டி யருமஞ்சள் கழஞ்சொவ் வொன்றே 113

எலவே நுணுக்கிக் கொண்டே யிரதமு மதனுட் சேர்த்துச்
சாலவே கிளியாய்க் கட்டித் தழலிடைப் புகைத்தி டாய்பின்
கோலவா மணக்கி னெண்ணெய் முழுகிடக் கூறுஞ் சூலை
மேலுநீர் கிரந்தி குட்டம் வெடித்திடும் பறங்கி போமே 114

### விஷநீர்ச்சூலை

மேவிய கிரந்தி யாலும் விஷக்கடி தன்னி னாலும்
பாவிய வுடம்பு வற்றிப் பலபடக் குத்தி நோவாம்
சீவிய பொருத்துத் தோறு மென்புகள் தெறித்து வீழும்
மேவிய விஷநீர்ச் சூலை யென்றுதான் விளம்ப லாமே 115

நரம்பிடை யனல்போற் காந்தி நையவே கொதித்துக் குத்தும்
சுரங்கொளு மூதை விம்முந் துய்யநீர் கடுத்து வீழும்
மரம்பெறத் திமிர்ப்புண் டாகி மணிபணி விரல்கள் வீழும்
உரம்பெறு விஷநீர்ச்சூலை தானென வோதி னாரே 116

## சிகிச்சை

### சித்திரமூல ரசாயனம்

சித்திர மூலி வேருஞ் சிறியநீ ரெட்டி வித்தும்
ஒத்தசேங் கொட்டை குக்கி லோடுகெந் தகநல் லெள்ளும்
இத்தொடு பறங்கி வேரு மினியநற் சாதி யைந்தும்
குற்றமில் துவர்ச்சை மேதை குலவுவெண் குந்து ருக்கம் 117

சாதியா மரிசி யாறுந் தக்கமுக் கடுகு காந்தம்
ஓதிய விளங்க மோம மோரொன்று பலமே கொண்டு
தீதற வறுத்தி டித்து விளாவுறக் கஷாயங் கூட்டிப்
போதுறு தேனெய் யிஞ்சிச் சாறொடு புரட்டிப் பாகாய் 118

பாகது மண்ட லங்கொள் பரிந்துப்புப் புளியு நீக்கி
ஏகுறு மாக மெல்லா மிளகவே வெந்நீர் விட்டாற்
சாகுறி போலும் வெய்ய சூலைநோய் கிரந்தி தானும்
போகுறும் விஷநீர்ச் சூலை தானெனப் புகன்றார் நல்லோர் 119

### என்புச்சூலை

முழந்தாள்கைகள்பொருத்துமுட்டுமோதியெலும்புமிகப் படைக்கும்
உளைந்து குத்திக் கடுப்புண்டாய் வெடித்தேயொடுவு மதிற்பாயும்
வளைந்தே மூக்குங் கைகாலு மயமுங் கெட்டுத் தாதுக்கும்
விளைந்த வென்புச் சூலையென வாயுள் வேதம் விளம்பிடுமே 120

## சிகிச்சை

### இரசகாந்தக்குளிகை

சொல்லு நெல்லிக் கெந்தகமுந் துலங்குங் காந்தம் பொரிகாரம்
வெல்ல வோரொன் நிருகழஞ்சு மேவுஞ் சூத மொருகழஞ்சு
புல்லுந் தவிடு பனைவெல்லம் பொருந்தப் பாக்கி னளவுகொண்டு
முல்லை நகையீர் கையானீ ரரைத்தே முண்டை விழுங்கிடுமே 121

உண்டே புளிப்புக் கைப்புப்பத் துவர்ப்பு வகைக ளவைநீக்கிக்
கொண்டேவெந்நீர்த்தாரைகொண்டுகுறித்தாமணக்கினெண்ணெயினல்
வண்டே தேய்த்து முழுகிவர வடியு மொடுநீ ரென்பிவைகள்
பண்டே விழுந்த வெடிசூலை கிரந்திச் சூலை பறந்திடுமே 122



### நரம்புச்சூலை

உடல்கை கால்கள் மேற்படர்ந்தேயுறிபோல்நரம்புமுடிச்சுவிழும்
அடைவே குழைவு மில்லாம லடியும் புறமுங் கனத்திருக்கும்
திடமாய் நடக்க வொட்டாது முடக்கி னாலுந் திமிர்பெரிதாம்
இட்ரே செய்யுங் குணநரம்பின் சூலை யிதுவு மசாத்தியமே 123

### நிதம்பசூலை

தோற்புரை வழிய தாயங் குரித்தது கனத்தே யேறி
நீர்ப்புக வாயுக் கோத்து நிரம்பியே முளைத்தேங் காய்போல்
ஏற்கவே ...முற்றி யிறுகியே திரளு நாளில்
நீர்ப்பொசிந் திருக்கு மென்னி னிதம்பமாஞ் சூலை தானே 124

பிள்ளைப் பெற்ற விடந்தன்னிற் பெருத்த யோனி தனில்வாயு
உள்ளே குருதி தடைப்பட்டே யொதுங்கிப்புடைபட்டொடுவாகி
மெள்ளக் கனத்தோர் பால்வீங்கி வெடித்தே வலியு மாயிருக்கும்
வள்ளைக் குழலா யிக்குணந்தா னிதம்ப சூலை வகைதானே 125

வெய்யதோர் கிரந்தி தன்னான் மேவிய யோனி மீதே
மொய்பனை யதின்காயத் தோல்போன்மோதியேகனத்துக்கட்டி
நையுநீ ரொடுவு மாறா நத்தையிற் சதைபோ லுந்தும்
உய்விலா நிதம்ப சூலை தானென வோதினாரே 126

## கிசிச்சை

### புகை

பாம்புக் கண்டங் குந்துருக்கம் பருக்கை படாமற் பொடிசெய்து
சாம்பல் போக்கித் தழலெடுத்துச் சட்டி தனிலிட் டுரலுள்ளே
சோம்பா துரலா லழலுமூடிச் சுகமா யாளை யதிலிருத்தித்
தேம்பப் பொடியை யதிற்றூவித் திறமாய்ப் புகைக்கவலிவிடுமே 127

### புகை-2

தக்க வோமம் வெள்ளையுள்ளிச் சருகு சர்ப்பக் கண்டமுடன்
சுக்கு மிளகு திப்பிலியுஞ் சோமன் வசம்பு குந்துருக்கம்
மிக்க வெளுத்த லவைநுணுக்கி மேவுமுடம்பிலெண்ணெயிட்டே
ஒக்க விருத்திப் புகையூட்ட யோனிச் சூலை யோடிடுமே 128

### சிறுகுறிஞ்சி யெண்ணெய்

அடைவுபெறு சிறுகுறிஞ்சிச் சாறு நாழி
யதனுடனே முடக்கொற்றான் சாறு நாழி
இடமுடைய நல்லெண்ணெய் தானு நாழி
யிதிற்காயஞ் சீரகங்கார் கோலு மேலம்
திடமுடைய குந்துருக்கஞ் சன்ன சாலை
திரிகடுகு வசம்புள்ளி மதுரங் குப்பை
பொடிபடவே தூவிவடித் துள்ளே கொள்ளப்
பொருநிதம்ப சூலைவலி யொடுவும் போமே 129

### அண்டசூலை

வாயுவினால் நீரினால் மாங்கிஷத்தா லிரத்தத்தால்
ஆயபல சூலைநோ யண்டமோர் பால்நின்று
சேயகுட லுள்ளே செனித்திறங்கு மிக்குணங்கள்
ஆயவ சாத்தியமா மென்றறிந்து கொள்வதுவே 130

### சிகிச்சை

### சிரைகுத்த

வாயுத் தசையிரண்டு மாற்றிநீ ரேற்றமெனில்
ஆயப் படுநரம்பி லந்நரம்பை யுந்நீக்கி
நேயப் படுங்கார நீவைப் பனவளவு
சேயப் படுஞ்சிகிச்சை யாவையுங்கேள் சேயிழையே 131

காரத்தால் வெந்திடத்தே கட்டறவே நற்கருவி
கோரத்தா னத்துட் குறித்தழுத்தி நீரிரத்தம்
பாரிற்றான் வீழ்ந்தாற் பதப்படவே யொற்றியிட்டு
ஊரப்புண் மீதே யுதிரநீர் மாற்றியிடே 132

### உட்கொள்ள

### பறங்கிப்பட்டைச் சூரணம்

மாற்றியிடும் பின்னு மதித்தரத்த நீர்வந்து
தோற்றியிடா துண்ணச் சொல்லுதுங்கேண் மேன்மருந்து
சாற்றியிடும் பறங்கி வேர்நெல்லிக் கெந்திகுக்கில்
சீற்றமிரு தாரசிங்கி சேரொன் றிருபலமே 133



மேவியநற் சுத்திசெய்து மிக்க திரிகடுகும்
பாவுந் திரிபலையும் பண்டேலஞ் சீரியரும்
கூவியநற் சாதியைந்துங் கூறுமிரு ளோமமுமே
காவியங் கனல்லாய் கடுகு சமனிவையே 134

ஏலவே நன்றா யிடிதேன் வெருகடியுண்
பாலதா மண்டத்தி லுள்லபல சூலைநோய்
மேலு மிரத்தம் விழுந்துளைந்த வேதினைநோய்
நூலுளோர் தீருமென நோக்கி யுரைத்ததுவே 135

### அண்டவாயுச்சூலை
### (பக்கசூலை)

வந்து பொருமு மண்டத்தில் வலித்து மிகவுஞ் சுரந்தோன்றி
நொந்தே யுடம்பு புண்போல நோவி னுடனே தலைவலியும்
இந்த வடைவே குணந்தோன்றி லிதுவே பக்க சூலையெனத்
தொந்தத் துடனே வருவதெனச் சொல்லுங் குறிக ளிவை யாமே 136

கொண்டிடுங் குடலிற் றங்கும் குறைந்தொரு பாலிற் றோன்றி
மண்டியே விதையி லொன்றை வலித்துற வுடலுள் வாங்கும்
பண்டுதா னண்ட வாத பாரிச குணமா மென்று
அண்டரு முனிவர் தாமு மறியவே யுரைக்க லுற்றார் 137

### அந்திரசூலை

கொண்டதோர் பிரமே கத்தின் குணமொரு பாலில் வீங்கி
விண்டிடக் குறுகி நொந்து மிகுசுரம் பிடரி நோவாம்
பண்டுதா னண்ட வாதம் பற்றியே குடலுள் வாங்கும்
அண்டரு மறியச் சொன்னோ மந்திர சூலை தானே 138

### சிகிச்சை

### குடிநீர்

கழல்மணி வெள்ளை யுள்ளி கடியதோர் முருக்கின் பட்டை
அழலுடை சுக்குக் கொள்ளு மஞ்சிரண் டாகக் கொள்ளில்
குழலிடை யோசை போலக் குமிறிடுங் குடலில் வாதம்
பழகிய சூலை குன்மம் பறந்திடும் பக்க வாய்வே 139

### குடிநீர்-2

பெருக்குங் காயம் வெள்ளுள்ளி பேணு மிரிசு வேர்க்கொம்பு
முருக்குஞ்சாரடையோரொன்றுமுன்னேர்படியெட்டொன்றாக்கித்
திருத்த மாகக் கொண்டிடுகிற் செப்பு மண்ட சூலைநோய்
ஒருத்த ரார்க்கும் வாராம லோடும் பக்க சூலையுமே 140

### வெண்காயக்குளிகை

சாரடைக் கிழங்கிந் துப்புத் தழலிடு சுக்க துள்ளி
சீறுசித் திரத்து மூலஞ் †செம்பொனின் றாரம் வாளம்
வீறதா யரைத்தே ரண்ட வெண்ணெயில் விழுங்கு வீரேற்
கூறிய வண்ட சூலை வாதமுங் குலைந்து போமே 14

உள்ளி-பலம்-1 மற்றைச்சரக்குகள்-வகை-கழ-1 கள்ளிப்பால்-கழ-2
ஆமணக்கெண்ணெயிற் காய்ச்சியும் கொள்ளலாம்.

### உள்ளியாமணக்கெண்ணெய்

சாறணை சித்ர மூலி தகுவீழி வேரிந் துப்புக்
கூறிய பலமொவ் வொன்று கூடுள்ளி யொருப லங்கொள்
வீறுயர் கார மெட்டுக் கழஞ்சுடன் காயம் வாளம்
பேறுள கள்ளி யின்பால் பேரா மணக்கி ணெண்ணெய்படி 142

படியே தேங்காய்ப் பால்நாழி பகருந் தும்பை பொடுதலைநீர்
அடைவே முருக்குத் ‡திருமேனி யதுவோ டுவாயு மிஞுசியினீர்
விடுநீர் கடுகு திரிபலையும் விரும்பி யரைத்து வெந்துவரும்
படிகுந் துருக்கப்பொடிதூவிப் பதத்தில்வடித்துக்கொள்ளுகவே 143

கொடுநீ கரண்டி மண்டலத்திற் கூறு மண்ட சூலைபல
இடரே செய்யுங் குடல்வாயு விரைக்கு மந்தர வாயுகுன்மம்
கொடிதாஞ் சலப்ர மேகமதாற் கூறுந் தொந்த சூலையெலாம்
பொடியாம் பக்க சூலையுடன் போகு மென்று புகன்றனரே 144

†செம்பொனி னிரசம் என்றும் பாடம்.
‡திருகுகள்ளி யொடுவினடக்கி என்றும் பாடம்.



### சூலை முதலயவற்றிற்கு பொதுச் சிகிச்சை

### குக்கிற்சூரணம்

கூரிய குக்கில் நாலு பலமது சுத்தி கொண்டு
சீரிய கடுவி எங்கத் திரிகடு பலையோ டோமம்
சாருறு துரிசு துத்தந் தகரங்குங் குமப்பூக் கோட்டம்
நேரிழை தேவ தார நிகரிலா வரிசியாறே 145

ஆனவெண் குந்து ருக்க மரத்தைகர ரவின்பூச் சாதி
†கானுறு மேலங் கஞ்சாக் காரமுஞ் சார மைந்தும்
பானலங் கண்ணி னாளே பகர்ந்திடு முப்போ ரைந்தும்
தானமாம் பஞ்ச மூலஞ் சாதிபத் திரியு மாமே 146

மேவுந் சத்த வர்க்கம் விடயம்வெள் எறுகி னோடு
தாவுயர் வேப்பம் பட்டை சாற்றிய மருந்து மின்னும்
பாவுநற் சீனப் பட்டை பாரங்கி மஞ்சள் நாலு
பூவையே சமன தாகப் பொடித்திடு புகலக் கேளே 147

ஓவிய மனையா யொக்கச் சமன்கொண்டு நாலி லொன்று
தாவுகெந் தகமுஞ் சுத்தி தான்செய்து மருந்திற் கூட்டித்
தூவிடாய் நெய்தே னிஞ்சிச் சாற்றொடு தோயக் கூட்டிப்
பாவனை யாகக் கொள்ளப் பாறிடும் பலநோய் சூலை 148

இருமலி னோடு காச மிளைப்புடன் பலகி ரந்தி
வருபெருங் கிரந்தி குட்ட வகையெலா மேகு மென்று
திருமறை முனிவர் முன்னாட் செப்பினர் புளியு முப்பும்
வருபல கிரந்தி நீக்கி யருந்திடு மருந்து காணே 149

### பச்சிலைச் சூரணம்

நொச்சி பிரண்டைசிவன்வேம்புநுவலும்வேலிப்பருத்திகையான்
கைச்ச வியங்கு செருப்படியுங் கழற்சி முருக்கு வெற்றிலையும்
பச்சைப் பசிய நிம்பவிலை பச்சிலை வர்க்கம் பிடியொன்று
நச்சு மிரசங் கழஞ்சிரண்டு நிறுமேன் மருந்து நவில்க்கேள 150

†கானுறுமேலம்-பேரேலம்

கெந்தகங் கருஞ்சீ ரோமங் கிளர் திரி கடுகி னோடு
வெந்தயம் விளங்கங் காந்த மேவிய கழஞ்சு வீதம்
சிந்திடா திடித்துத் தூளாய்ச் சேர்த்தரை கல்வந் தன்னிற்
கொந்தலர் குழலி னாளே கொடுப்பதேழ் பொழுது தானே 151

தானே யொருநா ளாறவிட்டுத் தனிவெந் நீரி லேகுளித்து
மானே பின்ன ராமணக்கி னெண்ணெய்த் தலையில் வைத்தின்னும்
ஊனா ருடம்பு தனிற்றேய்த்து முழுகி யுப்புப் புளிமறக்கிற்
சீநீர் கிரந்தி சூலையுடன் கரப்பன் முதலாய்த் தீகந்திடுமே 152

### கரிசாலைச்சூரணம்

கையான் றகரை வேம்பினிலை காறும் பிரண்டை நாயுருவி
மையா ரவுரி சிவன்வேம்பு வன்னி மூல நிலவாகை
மெய்யார் சீந்தில் வேருடனே மேவு மியங்கு சித்ரமூலம்
தொய்யின் முலையாய் முககடுகு சோம னுப்பு முப்பலையே 153

மோதங் கடுகு வசம்புமஞ்சள் முப்பத் திரியோ டதிமதுரம்
காதுங் கோட்டங் கற்கடக சிங்கி கஞ்சா வரியாறு
சீத லவணங் காந்தமிவை சேர்முக் கழஞ்சு வகையொன்று
மாதே வறுத்துப் பொடியாக்கி மதுநெய் யிஞ்சிச் சாறருந்தே 154

தீரும் வியாதி செப்பக்கேள் சேருங் கிரந்தி யுறுசூலை
கோர மான பவுந்திரத்திற் கொடிய சூலை கரப்பனுடன்
சோரும் வாத மிகுசூலை சொறியுங் குட்ட முறுசூலை
தீரு மெனவே முனிவரர்முன் செப்பு மாறு செய்தறியே 155

### நெல்லிமுள்ளிச் சூரணம்

நெல்லிப் பருப்பு மிளகுமஞ்சள் நேராங் கடுக்காய் சிவன்வேம்பு
நல்வெள் ளறுகு கொடுவேலி நன்னா ரியின்வே ரியங்கம்வேர்
புல்லுங் கருடக் கொடிசீந்தில் பொரியுங் காரம் வசம்புசுக்குச்
சொல்லுந் திப்பிலி சோமனுப் புத்துலங்கச் சமன் கொண்டிடி
பொடியே 156

பொடிவெரு கடியே தேனிற் குழைத்திரு போது முண்ண
முடுகிய வாயு பித்த மொழிந்திடுஞ் சிரங்கு குட்டம்
குடலுறு கிராணி வாயுக் குன்மநோய் பாண்டு சூலை
வெடியுறு கரப்பன் றீரும் விரேசன சுத்தி யாமே 157



### குக்குடப்பட்டைச் சூரணம்

கோதையே சீனப்பா குக்குடத்தி லிட்டவிக்கும்
தீதில்லாச் சூரணத்தைச் செப்பக்கேள்- எதமறும்
பட்டையொரு நாலுபலம் பாங்காக வேசீவி
இட்டமுறு குப்பிச்சாற் றிட்டுறிக்- கட்டாய்
நிழலுவர்த்தி மேன்மருந்து நேரான காந்தம்
வளமருவு முக்கடுகு வாசம் -தெளியும்
அரிதாரங் கெந்தகமு மாஞ்சாதி லிங்கம்
பொரிகார மோமமுடன் போதத்- தெரிசாதிக்
காய்பூவும் பத்திரியுங் கார்கோல் துரிசுதுத்தம்
தூயதொரு சாரமைந்து தோகையே- வாயு
விளங்கமிரு சீரகமு மேலமில வங்கம்
வழங்குகுரா சானியவின் மாதே- களங்கமறும்
குக்கின்குள விந்தங் கொடுவேலி வேர்த்தொலியும்
நற்கடுகுவெந்தயமு நார்மதமும் -தக்க
அரிசிவகை யாறு மடர்சோ னுப்பும்
வருசிவதை ரோணி மருந்தொன்- றுரிய
நிறைநாற் பலங்கொண்டு நேரா யிடித்து
மறுகால் வடிகொண்டு மாவாய்க்- குறியான
பட்டைப் பொடியோடு பாங்காக வேவிரவிப்
பெட்டைக் கருங்கோழி பின்கொணர்ந்து கட்டான
கால்தலைரோமங் களைந்து குடல்போக்கி
மேல்மருந் தெல்லாம் விரவியிட்டு- நூல்கொண்டு
தைத்தொரு தாழி தனிற்கோ சலங்குறுணி
அத்தோடு காணச்சா றுங்குணி குற்றமறு
சித்ரமூலிச் சாறு சிறுதும்பை நொச்சிகள்ளி
உத்தமா காணி யுடன்மேனி- முத்தின
வேளை பொடுதலையும் வேறொன்று நீர்நாழி
தாள முன் னீருடனே சாரவிட்டுக்- கேளாய்நீ
கோணியற்பட் டால்வேடு சட்டி யொருகுடத்தைப்
பேணியதில் வைத்துப் பிரளாதே- காணும்
இடையினில்மண் பூசி யிதமா யெரித்தே
அடைவே சுவறி னெடுத்து- உடனே
கதுப்பெல்லாம் போக்கி யுலர்த்தி யிடித்து

நலம்பெற நாற்பது நாட்கள் - துலங்கிய
தேனில் வெருகடி தூள் தின்று புளியுப்பிவைகள்
ஆனவித மெல்லா மறநீக்கி - மானேகேள்
வெள்ளா டுடும்புமுயல் மேவு கவுதாரி
உள்ளான் சிவல்காடை யூர்க்குருவி - தள்ளாத்
திருக்கைசுற நெய்த்தோல் வெளிவரால் போத்தி
விரித்துலர்த்திக் கொள்கறிகண் மேலும் - பருத்த
துவரம் பருப்புடனே தூதுளையின் காயும்
அவரை முருங்கை யதின்பிஞ் - சுவரில்லாக்
கீரையின் றண்டுங் கிளந்த சுரைக்கொழுந்தும்
சிரகதலிப் பிஞ்சு சிறுகீரை - நேரான
கோழியின் முட்டையுடன் கோநெய் யிவையருந்திப்
தாழா மணக்கெண்ணெய் தான் முழகில் - ஆழமான 158

குட்டமவை யெட்டிநெடு குத்தழல் கடுப்பிவைகள்
முட்டினை முடக்குவலி முக்குதலை - கட்டியிடு
சூலைபடர் தாமரைகள் கால்தலைகள் மேல்சொறிவு
சீல்புரைகள் மேலுளைவு தேகமதில் - ஆலமென
வந்துறு கிரந்திகள் பறங்கிகள் வரண்டிடுதல்
நொந்திடு சிலந்திகள் பவுந்திரமும் - மந்தமுறு
கோரைவலி வாதமொடு கோபமுற வூறுதலை
பாதவெடி மேவுகடி பாகவலி - காதுகுளுட்
பொமலது வயிறழிவு பொடுபொடென விரவுகொளல்
இருமியுறு கோழைவிழ லெரிவுகொளல் - செருமியே
மண்டையிடி துண்டமதில் வந்ததை சலங்களொடு
தொண்டையுறுபுண்புரைகள் தொங்கல்விழல் ஒண்டொடியே
புற்றெழுதல் மொத்திகொளல் பொத்திகடி யத்திசுரம்
மொய்த்தகப விக்கலொடு முக்குதலை - சிக்கியே
தீரடைத்திடல் நீம் தசைக்கொளல் வீடனத்துதல்
ஊர்சொ றிக்கொளல் அமல்பொ ருக்கெழல் - தீரா



ஊதை யப்புதல மீக்கொளல்
நோம் பலபிணி யாராய்ந் ததிலுறு
சீராந் தெரிகுறு மறிவோர்கள்
உளபல பிணிகள் விதமுட னகல
முனிவரனிதனை யுலகினி லுரைசெய்
யருமறை தெரிவார் விதமுறையுணரும் பெரியோரே

**பறங்கிப்பட்டைலேகியம்**

பட்டையோ ரெட்டதாகும் பகருங் கெந்தகமு நாலு
சட்டமா மசுவ நாலு தழல்கொடு வேலி ரண்டு
மட்டமா யிடித்து நெய்யு மருவுசர் கரையுங் கூட்டில்
நட்டமாஞ் சூலை மேக நயந்துபுண் தீரு மன்றே

Virus Printers Inuvil